# ஜகன் மோகினி

JAGAN MOHINI

ESTD. 1923

ஏப்ரல்
1955

அணா
நான்கு

71



ஸ்ரீராம
நவமி

1—4—55


71/3-53-

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1955
MADRAS

| மலர் 32 | தனிப்பிரதி அணா 4 | ஏப்ரல் '55 |
|---|---|---|
| இதழ் 4. | வருடச் சந்தாரூ. 3. | ஜய பங்குனி |

# க்ஷேமலாபங்கள்

ஸ்ரீ கீதாசாரியன் திருவருள் கடாக்ஷத்தினால் பிறக்கப்போகும் மன்மத வருஷமாகிய புது வருஷம் நம்மெல்லோருக்கும் சகல மங்களத்துடனும் இருக்கவேண்டுமாய் ப்ரார்த்திக்கின்றேன். நாம் எதிர்பார்க்கும் காரியம் நடக்காமலும், எதிர்பாராத சில காரியம் நடந்தேறிவிடுவதும்தான் பகவானின் லீலைபோலும்! அந்த முறைக்குச் சேர சில முக்யமான அசௌகர்யத்தினால் சித்திரைமாதப் புத்தாண்டு மலர் சொல்லியபடி போடஇலாது போனதுபற்றி மிக்க வருத்தத்துடன் மன்னிப்புக் கோருகிறேன். குழந்தைகள் நடிப்பதற்காகவே அவர்கள்பேசும் சாதாரண தமிழில் எழுதி அச்சாகிவரும் கருணை உள்ளம் என்கிற நாடகமும், ரேடியோவின் மூலம் வெளியான சந்திரகலா மாலையும் தனிப் புத்தகங்களாக வெளியாகும். மலருக்காகப் பணமனுப்பி உள்ள நேயர்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களைத் தெரிவித்தால் உடனே அனுப்பப்படும். வழக்கப்படி வெளியாகும் தனி நாவல் தயாராகிக் கொண்டிருக்கிறது. விவரம் பிறகு அறிவிக்கப்படும்.

—வை. மு. கோ.

---

## மஹாத்மாஜி ஸேவா சங்கம் (Regd.)

**66, வடக்குக் குளக்கரைத்தெரு, திருவல்லிக்கேணி.**

தை வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகளுக்குப்பிறகு சிவராத்திரி தியாகராஜர் விழா போட்டிகள் முறைமேநடந்தன. பாலர்வித்யாலயத்தின் வருஷவிழாவும் பெற்றோர்கள் தினமும் மார்ச் 1-ந் தேதி Director of Publicity ஸ்ரீ ஆர். பார்த்தஸாரதி தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது. குழந்தைகள் பலவித விளையாட்டுகளிலும், பரிக்ஷைகளிலும் ஜெயித்ததற்காகவும், வகுப்புகளில் முதலாவதாக இருந்ததற்காகவும் பலவித பரிசுகள் வழங்கப்பட்டன. குழந்தைகள் அனேகவிதமான கதம்பக் கேளிக்கைகள் நிகழ்த்தித் தலைவரைச் சந்தோஷிக்கச் செய்தனர். வகுப்பின் உபாத்யாயினி மிகத் தெளிவாகவும் வகுப்புகளின வளர்ச்சிக்கான விஷயங்களையும் பேசினார். தலைவர் மிக்க அழகாக வித்யாலயத்தின குழந்தைகளைப் பாராட்டியும் வளர்ச்சிக்கான முறையில் யோசனைகளையும் உத்ஸாகத்துடன் கூறியதோடு ஒவ்வொரு குழந்தைகளையும தானே தூக்கிக்கொண்டு பரிசுகளை வழங்கி மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கது. குழந்தைகளின் பரிசுகளுக்காக ஸ்ரீமதி எஸ். லட்சுமியம்மாள் 10 ரூபாய் நன்கொடை யளித்தார்கள். அதோடு கண்ணம்மாள் ராஜகோபாலனும் வை. மு. கோ. வும் சேர்ந்து பரிசுகள் வாங்கி வழங்கினார்கள். ஸ்ரீ எம். என். கிருஷ்ணஸ்வாமி

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்]

# ஊட்டவா? உண்ணவா?

"வேண்டிய கொணர்ந்து நல்க
விருந்துசெய் திருந்த வேலை" —கம்பராமாயணம்

அதிதி ராமன்தான் என்று தெரிந்துகொண்டதும், இத்தகைய விருந்து செய்கிறவள் சபரிதான் என்பதும் எளிதில் தெரிந்துவிடுகிறது.

முனிவர்களின் விருந்தாளியாகிய ராமன் 'தாழ்'குலத்திலே தோன்றிய சபரியின் விருந்தாளியாகவும் இருக்கிறான். அழகு நிறைந்த சொர்க்க சமானமாயிருக்கும் அந்தச் சோலையிலே சபரி, தானும் தனிமையும் தவமுமாக வசித்துவந்த குடிசைக்கருகே, பழவர்க்கங்களைக்கொண்டு அப்படியே ராமனுக்கு ஊட்டப்போகிறவளைப்போல் மனம் உருகி நின்று விருந்து செய்விக்கும் இந்த வைபவத்தை என்னென்பது?

தவமும் அன்பும் ஒருங்கே சுமந்து முதிர்ந்த இக் கிழவி, ராமன வருகையை நெடுங்காலமாக நினைத்து நினைத்து வழி பார்த்திருந்தாள என்பது இப்போது அவள் ராமனைப்பார்க்கும் அந்தப் பார்வையிலேயே காணக்கிடக்கிறது. அந்தப் பழவர்க்கங்களில் "ராமன உண்ணத்தக்கவை எவை?" என்று கண்டுபிடிக்க அவள் அவற்றை ருசிபார்த்தே கொண்டுவந்திருக்கிறாளாம்.

இந்த ராம தரிசனம் அவளுக்குக் கிடைத்த எதிர் விருந்து. அவள ராமனுக்கு ஊட்டததான போகிறாளா? அல்லது தானே உண்ணப் பார்க்கிறாளா ராமன் என்ற ஞானமிர்தத்தை?

மதங்கமுனிவருடைய ஆச்ரமததை அடைந்த ராமலக்ஷ்மணர்களை மிகவும் ப்ரீதியுடனும, பணிவுடனும் சபரி உபசரித்தாள். அர்க்யம், பாத்யம், ஆசமனீயம முதலிய பூஜைகளை விதிப்படி பக்தி நிறைந்த, பூரித்த உள்ளத்துடன் செயதனள். ஸ்ரீ ராகவன அவளுடைய யோகக்ஷேமங்களை விசாரித்து அவள் ஆசார்யர்க்குச் செய்த பணிவிடைகள பயன பெற்றனவா என்று வினவினார். அதறகு சபரி, ஸ்ரீராகவனைப் பூஜித்த அன்றே தன் தவம் சித்தித்தது எனறும் அன்றுதான் அவளுடைய ஆசார்யர்கள் பூஜிக்கப்பட்டார்கள் எனறும், அன்றே அவள் பிறபபு நற்பயன் பெற்றது எனறும் பக்திபபெருக்குடன கூறினாள்.

தான் ஆவலுடன சேகரித்து வைத்திருந்த பழவகைகளை அனபுடன் சமர்பபித்தாள. சக்ரவர்த்தித் திருமகன் அந்த அனபு அளிபபை அங்கீகரித்து பழங்களை அமுதுசெய்தார்.

ஸ்ரீராகவனுடைய அனுமதியின் பேரில் அக்னிப்ரவேசம் செய்தனள் சபரி. அதிலிருந்து அவளுடைய தேஜஸ்ஸான பிம்பம் வெளிப்பட்டு ஸ்ரீராகவனை நமஸ்கரித்து என்றும் அழிவில்லாததான மோக்ஷத்தை அடைந்தது. "பையரவில் மாயன பரமபதம் உங்களுக்காம்: மெய்யுரைக்கேன, கையிலங்கு நெல்லிக்கனி", என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் குறிப்பிட்ட பரமபதம் ஸ்ரீசபரிக்கு ஆசாரியாபிமானத்தினால்தான் கிடைத்ததன்றோ?

வை. மு. ஸ்ரீயின் **ஸ்ரீராமநவமி சிந்தனை**களை விசேஷ ஓவிய அணியுடன் **பக்தன்** ஸ்ரீராமஜயந்தி மலரில் விரிவாகக் கண்டு களிக்கவும்.

# பெரியாழ்வார்

ராகம்: ஹுஸேனி

## கீர்த்

பல்

| லகு | த்ரு | த்ரு | லகு | த்ரு | த்ரு |
|---|---|---|---|---|---|
| ,, ஸ . | ரி நி | ஸா | ப ப ப | த ம | ம ா |
| . . பா | லை க் | க . | ற ந் . | து . | அ . |
| ,, ப | ப நி | நி த தா | நி நி நி | ஸ் ஸ் | ரி ம க ரி |
| . . ப ல் | வ . | ஊ . . | யா . ள் | எ ன் | ம . . . |
| ,, ரி | ரி க | க ம | ப ப ப | ப ப | த ப |
| . . மே | லை . | . ம | க த் . | தே , | . . |
| ; ; ரி ரி | ரீ ம க | கா ப ம | மாபமகா | ரீ ரீ | ரீ ரீ |
| . , இறை | ப்பொ . . | மு . . | தங்.. கே | . . | . . |

அநு

| லகு | த்ரு | த்ரு | லகு | த்ரு | த்ரு |
|---|---|---|---|---|---|
| ,, ஸ | ரி நி | ஸ ஸ | ப ப ப | த ம | ம ம |
| . . சா | ள க் . | கி , | ர ா . . | ம . | மு . |
| த நி நி | நி ரி | ஸ் ா ரி ஸ் | ரி க ம | க ரி | ஸ் ா |
| சா ய் | த்துப் . | ப . . . | ரு . . | இட் | டு ப் |
| ,, ம | ப நி | நி த தா | நி நி நி | ஸ் ஸ் | ஸ் ஸ் |
| . . ஆ | லை க் | க . . . | ரு ம் . | பி ன் | . . |
| மாபாஸ்நி | நீ ஸ் ப | ப நி த ப | மககாகா | க க | க ம |
| அ சோ | தை . . | நங் | கா . : | ய் . | உ ன் |

சர

| லகு | த்ரு | த்ரு | லகு | த்ரு | த்ரு |
|---|---|---|---|---|---|
| ஸ ஸ ஸ | நி நி | ரி ஸ | ப ப ப | த ம | ம ம |
| வ ரு க | வ ரு | க . | வ ரு க | இ ங் | கே . |
| ரி க ம | ப ப | ப நி த ப | மகமபதப | பமகரி | ஸ ஸ |
| க ரி ய | கு ழ ல் | செ ய்ய . | வாய்.மு. | க . . . | த் து க் . |

மத்யமகாலம்

| லகு | த்ரு | த்ரு | லகு | த்ரு | த்ரு |
|---|---|---|---|---|---|
| பபபநிதநி | ஸ்ா நித | நீ ஸ் ா | நீநீகரிகா | ரீ கா | ப ம க ரி |
| கோ.குலமு,டைக்குட்டனேயோ | | | குன்றெடுத்தாய் | குட | மா டு. |

தமிழ்நாடு
183140

# திருமொழி

ஸ்ரீமதி ஏ. ராஜம்மாள்
தாளம்: திருபுடை

## தஊன

லவி

| லகு | த்ரு | த்ரு | லகு | த்ரு | த்ரு குல |
|---|---|---|---|---|---|
| ப நி த | நி நி | ரிஸ்நி த | ப ப ப | த ம | ம ா ‖ |
| டு . ப் | பே . | ற . . | வை . . | த் து ப் | . . ‖ |
| ஸ் ஸ் ஸ் | ரி ஸ் | நி த | ப ப ப | பாதப | மகரீ ‖ |
| க . . | ளி . | ரு ப் | ப . . | … | … ‖ |
| க க க | ம ம | ப நி த ப | மகமபாம | க ரி | ரி ஸ ‖ |
| நெருப் | பு . | வே . ண் | டி சி … | சென் | று . ‖ |
| ரி க க | பம கரி | ஸ ரி | ரீ க ஸ | ஸ் ஸ் | ஸ ஸ ‖ |
| பே . . | சி … | நி ன் | றே , ன் | . . | … ‖ |

**பல்லவி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப ப நி | நித தா | த நி | ஸ் ரி ஸ் | ஸ் ஸ் | ஸ் ஸ் ‖ |
| டை . . | ய … | ந ம் | பி . . | . . | . . ‖ |
| ஸ்ரீ ஸ் ரீ | ரி ஸ் | நி த | ப ப ப | த ப | ம ம ‖ |
| போ .. ந் | து . | நி ன் | ரு . ன் | … | . . ‖ |
| நி நி நி | ரி ஸ் | நி த | ப ப ப | த ம | ம ம ‖ |
| மொ ழி . | ய . | ஊ . | ய . . | . . | . . ‖ |
| பதபமபம | க ரி | ஸ ரி க ரி | பமகரிஸரி | ரி க | ஸ ஸ ‖ |
| ம . . க . . | ஊ கீ. | கூ . . . | … … | வ ா | . ம் ‖ |

**ணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப த நி | ப ப | ப நி த ப | மகமபதப | பமகா | ரி ரி ‖ |
| வ ா ம | ன நம் | பி … | வ. ரு, க | இங், | கே \| |
| ரி க ம | ப ப | ப ா த ப | மகமகமப | பமகா | ரி ரி ‖ |
| காகுத்த | ந ம் | பி . . . | வ, ரு, க. | இ ங். | கே க , ‖ |
| ஸ்ஸ்ஸ்ஸ் | பாபா | ப ா க ம | க ரி ஸ் ா | நிநீரிஸ | நிதபம ‖ |
| கூத்தா ‖ | வே . . த ப் பொ. | | ரு . ளே | என்வேங் | கடவா ‖ |
| பபஸ்நிஸ்ப | பநிதப | | ம ா க | ம ா கரி ‖ | |
| வித்தகனே. | இங்கே | | போ . | த .ராய் ‖ | |

,,ஸா
பா,

# பகவத்விஷய ரஸாநுபவம்

## [திருவாய்மொழிப் பொருளமுதவெள்ளம்.]

ஸ்ரீ காஞ்சீ மஹா வித்வான் உ. வே. ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[பிப்ரவரி இதழ்த் தொடர்ச்சி]

திருவாய்மொழி முதற்பதிகத்தின் பத்தாம் பாசுரமான "பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்" என்ற பாட்டில் விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு அந்தரங்கமான ஸர்வவ்யாப்தி அநுபவிக்கப்படுகிறதென்று கீழே விவரித்துள்ளோம். இது வேதாந்திகளின் தரிசனத்தில் மிகச்சிறந்த விஷயமாதலால் இதைப்பற்றி ஸாரமாகவுணர்த்துவோமிங்கு. இவ்விஷயம் பன்னிப்பன்னியுரைக்கப்பட்டாலொழிய மதியில் ஏறுவது அரிதாதலால் பன்னியுரைத்தல் இன்றியமையாததாம். எல்லாப்பொருள்களிலும் உள்ளும்புறமுமொக்க வியாபித்திருக்கின்றானீச்வரன் என்பது உபநிடதங்களில் ஓதப்பட்டுள்ள விஷயம். இதில் இரண்டு வகையான ஆக்ஷேபங்கள் தோன்றுகின்றன. அணுவான பொருள்களிலே உள்ளீடாக வியாபித்தல் ஸம்பவிக்க மாட்டாதென்று ஒரு ஆக்ஷேபம். ஒரு பொருளிலும் பகவானுக்குப் பரிபூர்ணவ்யாப்தி ஸம்பவிக்க மாட்டாதென்று மற்றொரு ஆக்ஷேபம். இவ்விரண்டு வகையான ஆக்ஷேபங்களுக்கும் ஸாதகமான யுக்திகளுமுண்டு. அணுவான பொருள்களானவை அவயவமற்றவையாதலால், அவற்றுக்கு உட்புறம் வெளிப்புறம் என்று சொல்லத்தக்க அமைப்பு இல்லாமையாலே அவற்றிலே பகவானுக்கு உள்ளுற வியாப்தி சொல்லப்போகாது. அணுப்பொருள்களிலே உள்ளுற வியாப்தி சொல்லலாகாதென்கைக்கு இது ஸாதக யுக்தி. இனி, ஒரு பொருளிலும் பகவானுக்குப் பரிபூர்ண வியாப்தி ஸம்பவிக்கமாட்டாதென்னுமாக்ஷேபத்திற்கு ஸாதக யுக்தி என்னவென்றால், ஒரு பொருளிலே அவனுக்குப் பரிபூர்ண வியாப்தியை அங்கீகரிக்குமளவில், [அதாவது, பகவானுடைய ஸ்வரூபம் ஒன்றிலே நிச்சேஷமாக நிறைந்து கிடக்கிறதென்று சொன்னால்] மற்றொரு பொருளிலே வியாபிக்க வஸ்து இல்லையாய் விடும். பகவத்ஸ்வரூபம் ஒன்றிலேயே பரிஸமாப்தமாய்விட்டால் மற்றொன்றிலே வியாபிக்க இயலாதன்றோ. பகவானுக்கு எந்த வஸ்துவிலும் பரிஸமாப்தமான வ்யாப்தி கிடையாதென்கைக்கு இது ஸாதகயுக்தி.

இங்கே கவனிக்கவேண்டியதாவது, சாஸ்திரங்களினால்தேறும் பொருளை யுக்தியினால் ஆக்ஷேபிப்பதென்பதை வேதாந்திகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அந்தர் பஹிச் ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்கிற வேதாந்த வாக்யமானது ஸகல வஸ்துக்களிலும் பகவான் உள்ளும்புறமுமொக்க வியாபித்துள்ளானென்று ஸ்பஷ்டமாக ஓதியிருக்கையாலே இதிலுள்ள ஸர்வ சப்தத்தை ஸங்கோசப்படுத்துவதற்கு யாருக்கும் அதிகாரமில்லையென்று ஆசாரியர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். ஜீவாத்மாவினுள்ளே பகவானுடைய வியாப்தியை நிரூபிக்குமிடத்து ச்ருதப்ரகாசிகையிலே இதன் விரிவு காணத்தக்கது.

பகவத் ஸ்வரூபம் ஒன்றிலேயே நிச்சேஷமாக வியாபித்துவிட்டால் மற்றொன்றிலே வியாபிப்பதற்கு வஸ்துவில்லையாகும்—

என்பது பற்றித் தெளியச் சொல்லுகிறோம். பரமபுருஷன் ஒருவனுளனென்பதையும், அவனுடைய ஸ்வரூபம் குணம் முதலியவை இப்படிப்பட்டவையென்பதையும் நாம் சாஸ்திரங்களைக்கொண்டு அறிகிறோமேயல்லது வேறு எதனாலும் அறிகின்றிலோம். இந்திரியத்திற்கு எட்டாத விஷயங்களில் நமக்கு சாஸ்த்ரமே கைவிளக்கு. சிற்றறிவாளரான நாம் சாஸ்த்ரங்களிலே நேராக இறங்கித் தத்துவங்களையும் மருமங்களையும் உணர்ந்துகொள்ள உரிமையுடையோமல்லோம். "சாஸ்த்ரஜ்ஞானம் பஹுக்லேசம் புத்தேச் சலநகாரணம், உபதேசாத் ஹரிம் புத்த்வா" என்று சாஸ்த்ரமே கூறி நின்றது.

(இதன் பொருள்.) சாஸ்த்ரங்களை உட்புகுந்து அறிவது மிகவும் கிலேசமுடைத்து; சாஸ்த்ரங்களை அறியவறிய புத்தி சலிப்பதற்கு ஹேதுவாம்; ஆகவே, சாஸ்த்ரார்த்தங்களை நிஷ்கர்ஷித்துணர்ந்த பெரியோர்களின் உபதேசத்தைக்கொண்டே பகவத் ஸ்வரூபாதிகளை நாம் உணரவேண்டும் என்கை. தத்வதர்சிகளான மஹாப்ராஜ்ஞர்கள் வெண்ணெயைக் கடைந்து திரட்டியெடுத்துக் கொடுக்குமாபோலே லலிதமாக எடுத்துரைத்து வைக்க, அது கொண்டு உணரவே நாம் அதிகாரிகள். வியாஸர் என்கிற மஹர்ஷியானவர் தாமியற்றிய சாரீரகமீமாம்ஸையென்னும் ப்ரஹ்மஸூத்ரத்தில் "க்ருத்ஸ்ந ப்ரஸக்திர் நிரவயவத்வ சப்தகோபோ வா" என்றொரு ஸூத்ரமும், "ச்ருதேஸ் து சப்த மூலத்வாத்" என்றொரு ஸூத்ரமும் பொறித்து வைத்தார். இவற்றுள் முந்தின ஸூத்ரம் பூர்வபக்ஷ ஸூத்ரமென்றும், பிந்தின ஸூத்ரம் ஸித்தாந்த ஸூத்ரமென்றும் பாஷ்யகாரர்களாலே வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றது. சாஸ்த்ரங்களினால் தேறுகின்ற விஷயங்களில் குதர்க்க மூலகமான குசோத்யங்களைச் செய்யாமல் சாஸ்த்ரம் சொன்ன கட்டளையிலே இசையவேண்டுமென்று, மேலே காட்டின ஸித்தாந்த ஸூத்ரம் சிக்ஷிக்கின்றது. வேதாந்ததேசிகரென்னும் பேராசிரியர் ந்யாயஸித்தாஞ்ஜநமென்னும் சிறந்த நூலிலே இது தன்னையே எடுத்துக்காட்டி இவ்விஷயத்தை முடித்திருக்கிறார். அபரிமிதமான சக்தி வாய்ந்த பகவானுடைய ஸ்வரூபம் ஒரு வஸ்துவிலேயே பரிஸமாப்தமாய்விட்டால் மற்றொரு வஸ்துவிலே எப்படி வியாபிக்க முடியுமென்று ஆக்ஷேபிப்பதானது அப்பெருமானுடைய ஒப்புயர்வற்ற சக்திவிசேஷத்தை யறியாமையினாலாயது என்று முடிக்கப்பட்டது. இவ்வளவோடு நிற்போமிங்கு ...(10)

இனி, பதினோராம் பாட்டு இப்பதிகம் கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுவது. பதிகந்தோறும் இப்படியொரு பாட்டு முடிவிலே அருளிச் செய்யப்பட்டு வருகின்றது. ஆழ்வார்களுள், பொய்கையார் பூதத்தார் பேயாரென்னும் முதலாழ்வார்களும், திருமழிசையாழ்வாரும், திருப்பாணாழ்வாரும் இங்ஙனே நிகமனப் பாசுர மருளிச்செய்யாதவர்கள். நம்மாழ்வார், மதுரகவிகள், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய இவர்கள் இங்ஙனே யருளிச் செய்தவர்களாவர். அநந்யப்ரயோஜநர்களான உத்தமாதிகாரிகள் ஒரு பலனையும் விரும்பலாகாதென்று நூற்கொள்கையிருக்க, பரமைகாந்திகளான ஆழ்வார்கள் பயனுரைப்பது எங்ஙனே பொருந்தும்? என்று சிலர் கேட்கக்கூடும். எம்பெருமான் பக்தர்களுக்கு ஸகல பலன்களையும் அளிக்கவல்லவன்

என்று அவனுடைய பெருமையைப் பேசுவதிலே மூழ்ந்து நிற்கு மத்தனை. பலன் சொல்லியிருப்பதைக் கண்டு யாவரும் மேல் விழுந்து திருவாய்மொழியைக் கற்பர்களென்பதும் ஆழ்வார் கருத்தாகலாம்.

இப்பிரபந்தம் தொடங்குமளவிலேயே "ஆயிரத்து இவை பத்தும்" என்று அருளிச்செய்திருப்பதனால் எம்பெருமான் விஷய மாக ஆயிரம் பாசுரம் பாட வேணுமென்று ஆழ்வார் ஸங்கல்பஞ் செய்துகொண்டு பாடப்புகுந்தாரென்று கொள்ளலாகாது; ஆழ் வார்தாம் மயர்வற மதிநலமருளப்பெற்றவராகையாலே ஆயிரம் பாசுரம் தம் திருவாக்கில் அவதரிக்குமென்றுணர்ந்து அருளிச் செய்தபடி. எம்பெருமான் திறத்திலே ஆயிரம் பாசுரம் பேசியல் லது தரிக்கமாட்டாத தம்முடைய நிலைமையைக்கொண்டு அருளிச் செய்தபடியாகவுமாம்.

எம்பெருமானுக்கு இங்ஙனே ஓராயிரம் பாடல் அமைந்த அதிசயத்தைப்பற்றிக் கம்பர் சடகோபரந்தாதியில் இட்ட செய்யுள் (45) காண்மின்:—

> ''சோராதனவுளவோ பெருஞ்செல்வர்க்கு வேதஞ்செப்பும்
> பேராயிரம் திண்பெரும்புயமாயிரம் பெய்துளவத்,
> தாரார்முடியாயிரம் குருகூர்ச்சடகோபன் சொன்ன
> ஆராவமுதக்கவியாயிர மவ்வரியினுக்கே.''

இதன் கருத்தாவது, ஸ்ரீமந்நாராயணனுக்கு வேதங்களெடுத் துரைத்த திருநாமங்கள் ஆயிரம்; வலிய பெரிய தோள்கள் ஆயிரம்; திருத்துழாய் மாலை பொருந்திய திருமுடிகள் ஆயிரம்; இப்படி எல்லாம் ஆயிரமாயிரமாகவே அமையப்பெற்றுள்ள எம் பெருமானுக்கு நம்மாழ்வார் பாடிய அமுதம்போன்ற பாசுரங்களும் ஆயிரமாகவே அமைந்தன. பெருஞ்செல்வமுடையார்க்கு மற்றுஞ் சேராதபொருள்களுமுண்டோ? பெருஞ்செல்வ முடையார்க்கே யன்றோமேன்மேலும் பெருஞ்செல்வம் வந்து சேருவது என்பதாம்.

இந்த முதற்பதிகத்திற்கு என்ன பலன் பேசப்பட்டதென்னில்; "இவை பத்தும் வீடே" என்று மூலமுள்ளது. இப்பத்துப் பாசுர மும் வீடாகியமோக்ஷ ஸாம்ராஜ்யத்தைத் தரவல்லதுஎன்றபடி.(*11*)

## இரண்டாம் பதிகம்.

இனி, இரண்டாம் பதிகத்தின் ஸாரத்தை யனுபவிப்போம்.

* வீடுமின் முற்றவுமென்கிற இரண்டாம் பதிகத்தில் ஆழ்வார் பிறர்க்கு உபதேசம் பண்ணத் தொடங்குகிறார். கீழ்ப்பதிகத்தில் ஆழ்வார்க்கு நிகழ்ந்த பரத்வாநுபவம் ஒரு பெரிய திருநாள் போலேயிருந்தது. அப்படி யநுபவித்த ஆழ்வார் தம்முடைய அநுபவத்தில் நின்றும் கையொழிந்து பிறர்க்கு உபதேசிக்கப் புகுகின்றாரே; இஃது எங்ஙனே? கீழே தாம் அநுபவித்த விஷயத்தை எல்லை கண்டுவிட்டாரோ? அல்லது, தாம் அநுபவித்தது போதுமென்று விரக்தியடைந்துவிட்டாரோ? எனனில்; இரண்டும் சொல்ல இயலாது. "தனக்கும் தன் தன்மை யறிவரியான்" என்கிறபடியே எம்பெருமான் தன்னாலும் எல்லை காணமுடியாததான அவ்விஷயம் இவர் தமக்கு எல்லை கண்டதாக எங்ஙனேயாகும். * "கொள்ளமாளா இன்பவெள்ளம்" என்று கொள்ளக்கொள்ள [அநுபவிக்க அநுபவிக்க] மாளாத இன்ப வெள்ள மாயன்றோ பகவத்விஷய மிருப்பது. ஆழ்வா

ருடைய ஆசையைப் பார்த்தாலோ * காதல் கடலின் மிகப் பெரிதால் * என்றும், * மண்டிணி ஞாலமுமேழ் கடலும் நீள்விசும்பும் கழியப் பெரிதால் * என்றும், * சூழ்ந்து அதனிற் பெரிய என் அவா * என்றும் தாமே சொல்லிக் கொண்டபடியே மிகப்பெரிதாயிராநின்றது. ஆகவே, அநுபவிக்கப்படும் விஷய மாகிய பகவத் விஷயமும் சுருங்கமாட்டாததாம், அநுபவிப்பவ ராகிய ஆழ்வார் தம்முடைய காதலும் அளவுபடமாட்டாததாய் இருக்கையாலே, தாம் செய்யத்தொடங்கின அநுபவத்தில் நின்றும் மீள்வதற்கு வழியில்லை.

ஒரு விஷயத்தைச் சிறிது காலம் அநுபவித்தால் அதே விஷயத்தில் மற்றொருகால் விரக்தியுண்டாகக் காணுகின்றோம். அப்படியே ஆழ்வார் தமக்கும் பகவத் விஷயாநுபவத்தில் இப்போது விரக்திபிறந்து விட்டதோவென்னில்; இதற்கு ப்ரஸக்தியேயில்லை. ஏனென்னில். * எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதமே * என்றன்றோ இவ்வாழ்வார் தாமே யருளிச் செய்கிறார். ஒருநாளும் தெவிட்டாத அமுதமாயிருக்குமே ஆழ்வார்க்கு பகவத்விஷயம். அப்படியிருக்க, அநுபவத்தில் நின்றும் கையொழிந்து உபதேசிக்கத் தொடங்கு கிறாரென்ன வொண்ணாது.

உபதேசமுகத்தாலே ஆசார்ய பதவியை வஹிக்க ஆசைப்படு கிறா ரென்னவுமொண்ணாது; *நீசனேன் நிறைவொன்றுமிலேன்* என்றும்*தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோ பன்*என்றும் தம்மை மிகத்தாழ்வாக அநுஸந்தித்துக்கொள்ளுமி யல்வினரான ஆழ்வார்க்கு ஆசார்ய பதவியை வஹிக்கவேணு மென்கிற விருப்பமுண்டாக ப்ரஸக்தி யில்லையே.

ஆகில் அநுபவத்தை விட்டுப் பரோபதேசத்திலே இப் போது இவர் ஊன்றினது ஏன்? என்னில்; கேண்மின். பிறர்க்கு உபதேசிக்கிற காலத்தில் தம்முடைய அநுபவம் இல்லை யென்று கொள்வது தகாது. அநுபவத்தின் முதிர்ச்சியே இது என்று கொள்ளவேணும். அதை விவரிக்கிறோம். தாம் அநுபவிக் கும் பகவத்விஷயம் தனியேயிருந்து அநுபவிக்கக் கூடியதல்லா மையாலே, * மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம்* என்று கீதையிலே கூறியவண்ணம் பிறரோடு உசாவியே போது போக்கித் தரிக்கவேண்டியவரான ஆழ்வார் அப்படிப்பட்ட அதிகாரிகளைப் பெறுதற்காக நாற்புறமும் கண் வைத்துப் பார்த்தார்; அனைவரும் ஸம்ஸாரக் கடலிலே ஆழ்ந்து கிடந்தனர். குலசேகராழ்வார் (பெருமாள் திருமொழியில்) * மெய்யில் வாழ்க் கையை மெய்யெனக் கொள்ளுமிவ்வையம் * நூலினேரிடையார் திறத்தே நிற்கும் ஞாலம் ** மாரனார் வரி வெஞ்சிலைக் காட்செய்யும் பாரினார் * உண்டியே உடையேயுகந்தோடு மிம்மண்டலம் * என்றருளிச் செய்தபடியே கிடந்தனர். தாம் பகவத் விஷயத்தி லூன்றியிருக்கிறபோலே அவர்கள் விஷயாந்தரங்களிலே ஊன்றி யிருக்கக் கண்டாராழ்வார். அன்னவர்கள் படுமனர்த்தங்களைக் கண்டு பொறுத்திருக்கமாட்டிற்றிலர். அவர்களை எப்படியாவது திருத்திப் பணி கொள்ள வேணுமென்று அத்யவஸாயங் கொண்டார். அவர்களை எப்படி மீட்கலாமென்று பார்த்தார். "இவர்களோ சேதநர்களாயிராநின்றார்கள்; இவர்கள் விஷயாந்தர

ப்ரவணர்களாயிருந்தாலும் அந்த விஷயாந்தரங்களிலே வாசியறிந்து தீயவற்றைத் தள்ளி நல்லவற்றைக் கைக்கொள்பவராயிரா நின்றார்கள்; உணவுப் பொருளாகிய காய்கறி முதலானவற்றிலும் நன்மை தீமைகளை யாராய்ந்து நல்லவற்றைப் பரிக்ரஹிக்கவும் தீயவற்றைப் பரிஹரிக்கவும் வல்லவர்களாயிருக்கின்ற இவர்கள் இன்னமும் சிறிது ஆராய்ச்சியைச் செலுத்தமாட்டாதேயிரா நின்றார்கள், பகவத் விஷயத்தின் நன்மையையும் விஷயாந்தரங்களின தீமையையும் நாம எடுத்துக்காட்டினால் உண்மையை ஆராய்ந்துபார்த்து, கெடுதலான விஷயங்களை விட்டு பகவத் விஷயத்தைப் பறறக் கூடுமே; ஆதலால் அதை உபதேசித்துப் பார்ப்போம்" என்று திருவுளம்பற்றி, எம்பெருமானுடைய நன்மையையும், ஸம்ஸாரிகள பற்றிக்கிடக்கிற விஷயாந்தரங்களின் அற்பத்தன்மை அநித்தியத்தன்மை முதலானவற்றை விளங்க வுரைத்து, விஷயாந்தரங்களிலே நசையற்று பகவத்பக்தியைப் பண்ணுங்கோளென்று ஸம்ஸாரிகளுக்கு பக்தியை யுபதேசிக்கிறார் இப்பதிகத்தினால்.

அறிவிலிகளான ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்குமளவில், விரக்தர்களாய் ஆத்மகுணங்கள் நிரம்பியவர்களாய் அணுகிவந்து ஆதரத்தோடு அபேக்ஷிக்குமவர்களுக்கு உபதேசிக்க வேண்டிய சீரிய பொருள்களை, பகவானிடத்திலே வெறுப்புள்ளவர்களும் அற்பபலன்களிலே கால்தாழ்பவர்களுமான நீசர்களுக்கு உபதேசிக்கலாமோ! பகவத் கீதையிலே *தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:" என்று சொன்னபடியே அபிமானபங்கமாய் நெடுங்காலம் அநுவர்த்திப்பவர்களுக்கன்றோ உபதேசிக்க வேண்டும். அருமை பெருமை பொருந்திய அர்த்த விசேஷங்களை, கேட்பாருடைய கோரிக்கையினறிக்கே வலியப்பிடித்திழுத்து * சொன்னால் விரோதமிது, ஆகிலுஞ் சொல்லுவன் கேண்மினோ * என்று அடைவு கேடாகவுபதேசிப்பது பொருந்துமோவென்று கேள்வி பிறக்கும்; இதற்கு மதுரகவியாழ்வார் தமமுடைய துதிநூலாகிய கண்ணிநுண் சிறுத்தாம்பிலே* அருள்கொண்டு ஆயிரமின் தமிழ் பாடினானருள் கணடீர் இவ்வுலகினில் மிக்கதே * என்கிற பாசுரத்தினால் விடைதந்துள்ளார். எம்பெருமான் கைவிட்டவர்களையும் திருத்தியல்லது நிற்கமாட்டாத கரைபுரண்ட காருண்யத்தினால் உபதேசம் செயதருளுகிறார் என்றவாறு.

ஆசாரியர்கள் உபதேசம் செய்தருள்வதற்குப் பொதுவாக நான்கு காரணங்களுண்டு; (1) எம்பெருமான் நம்மை இம்மண்ணுலகில் அனுப்பியது, உபதேசங்கள் செய்து ஸம்ஸாரிகளைத் திருத்திப் பணிகொள்வதற்காக வல்லவோ? என்று நினைப்பது. (2) சீடர்களின் வேண்டுகோளைப் பெறுவது. (3) அவர்கள் வேண்டிக்கொள்ளாவிடினும் அவர்கள்படும் அனர்த்தங்கள் கண்டு பொறுத்திருக்கமாட்டாமை. (4) பிறர்க்கு உபதேசங்கள் தந்தாலல்லது தாம தரித்திருக்கமாட்டாமை. ஆக இந்நான்கு காரணங்களுள் சீடர்களின வேண்டுகோளாகிய இரண்டாவது காரணம் இல்லாமற் போனாலும் மற்ற மூன்று காரணங்களுக்குக் குறையில்லாமையாலே உபதேசிப்பது பொருத்தமேயாகும்.

(தொடரும்.)

# ஸந்தியாராகம்

சுருக்கி மொழிபெயர்த்தவர்:
ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்

[சென்ற இதழின் தொடர்ச்சி]

## 15

மைசூரில் அரண்மனை மகாவித்வான் வைணிக சிகாமணி வீணை சேஷண்ணா அவர்களை அறியாத பெயர் உண்டோ? மைசூர் மகாராஜாவின் சன்னிதானத்தில் யாருடைய கச்சேரி நடக்க வேண்டும் என்றாலும் அவர் சேஷண்ணாவின் அனுமதியைப் பெற வேண்டி இருந்தது. வெளியிலிருந்து வரும் வித்வான்கள் இதை ஒரு பரீக்ஷையென்று எண்ணாமல் சந்தோஷமாகவே சேஷண்ணாவின முன்னிலையில் பாடி அவருடைய ஆசியைப் பெறுவார்கள். அவர் வீட்டில் நடைபெறும் கச்சேரிகள் (சார்வஜனிக) பொதுக் கச்சேரியாகவே இருக்கும். விசாலமான கூடத்திலும், கூடத்தின் வெளியேயும் ஜனங்கள் பெருந்திரளாக நிறைந்து விடுவார்கள்.

அன்று வைணிக சிகாமணி சேஷண்ணா வீட்டில் பாலக்காட்டிலிருந்து வந்திருக்கும் வெங்கடராம பாகவதரின் சங்கீதக் கச்சேரி. பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள், சங்கீத வித்வான்கள், கனவான்கள் உள்பட எல்லோரும் வந்திருந்தார்கள். தம்பூராவை சுருதி கூட்டி பாகவதர் பாடவாரம்பித்தார். சங்கீதம் பதவிசாகவும், கம்பீரமாகவும் இருந்தது. சவிஸ்தார ராக ஆலாபனைக்குத் தோடியை எடுத்துக்கொண்டார். பாகவதர் அம்சத்தை மத்யமத்துக்கும் தைவதத்துக்கும் மாற்றிக்கொண்டே கனமாகப் பாடினார். அவருடைய பாடலில் பஞ்சமத்தை ஆரோஹணத்திலாகட்டும் அவரோஹணத்திலாகட்டும் உபயோகிககவில்லை. ராக ஆலாபனை முடிவடைந்ததும் பாகவதரின் சமீபத்திலிருந்த பாடகர் ஒருவர், "அவரோஹணத்தில் பஞ்சமத்தைக் கூட்டலாம் அல்லவா சுவாமி?" என்று கேட்டார். பாகவதர் முகத்தைச் சிணுக்கிக் கொண்டு "தோடியைப் பாடும்விதமே இப்படித்தான். வேறுவிதம் பாடினால் வேறு ராகமாகிவிடும்" என்று வெடுக்கென்று பதில் அளித்தார். கேள்வி கேட்டவர் பாகவதரின் பதட்டமான பதிலைக் கண்டு அஞ்சி வாயை மூடிக்கொண்டார். அங்கே கூட்டத்திலிருந்த கந்தை வேஷ்டியுடுத்த ஏழையொருவன முன்னால் நகர்ந்து வந்து "தோடி ராகம் பாடுவது இப்படி அல்ல. என அதிகப்பிரசங்கித்தனத்துக்கு மன்னிக்கவும். தாங்கள் பாடினது சரி இல்லை" என்றான. பாகவதர் அலக்ஷியமாக "உனக்கென்ன தெரியும் சங்கீதத்தைப்பற்றி?........"

"அடாணா, பேகடை பாடுவதுபோல் தோடியைப் பாடிவிட்டீர்! அந்த ராகத்தில் பிரதானமானது சோகரசமும், கருணாரசமும். தாங்கள் காண்பித்தது அற்புதரசமும், பயானகரசமும். அனுமதியளித்தால் நான் அவரோஹணத்தில் பஞ்சமத்தைக் கூட்டிப் பாடிக் காண்பிக்கிறேன்.

பாகவதரின் சினம் எல்லை மீறிற்று. 'இந்தப்பிச்சைக்காரன் என்னத்தைப் பாடப்போகிறான்' என்று, ''ஹும்'' என்று உறுமியவண்ணம் தம்பூராவை முன்னால் தள்ளினார்.

''ஆஹா! எவ்வளவு அற்புத சங்கீதம்!!'' ரஸிகர்களின் கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் உதிர்ந்தது. அவன் தம்பூராவைக் கீழே வைத்ததும் வெங்கடராம பாகவதர் எழுந்து நின்றார். தம் கையிலிருந்த வைரம் இழைத்த தோடாவை எடுத்து அந்தப் புதிய மனிதனின் முன்னால் வைத்துவிட்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். சேஷண்ணா அத்யானந்தத்துடன் அவனைத் தழுவிக்கொண்டு, ''தாங்கள் யார் சுவாமீ? தங்கள் ஊர் எது? தங்களுடைய குரு யார்?'' என்று கேட்டார்.

''நான் ஒரு அநாமதேயன். என் குரு மகாவித்வான் தஞ்சாவூர் கிருஷ்ண ஐயர்.''

''நீங்கள் என் குருவின் சிஷ்யரா? அப்படியானால் என் தமையன் ஆவீர்'' என்று பாகவதர் புதியவரைத் தழுவிக்கொண்டார். சேஷண்ணா மறுபடியும் புதியவரைப்பற்றி விசாரித்தார். ''நான் மைசூரான்தான். என் பெயர் லக்ஷ்மணராவ்'' என்றதுமே ''அண்ணா'' என்ற குரல் கேட்டது. ஜன்னல் ஒன்றில் நெருக்கடியில் அமர்ந்திருந்த கோபால் கூட்டத்தில் இடம் செய்துகொண்டு வந்து தமையனைக் கட்டித் தழுவிக்கொண்டான். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

வைணிக சிகாமணி சேஷண்ணா லக்ஷ்மணனை சும்மாவிடுவாரா? மைசூர் மகாராஜாவின் சபையில் அவனுடைய சங்கீதக்கச்சேரியொன்றை ஏற்படுத்திவிட்டார். தமையனின் கருணாமிருதப் பாடலை அரண்மனையின் வெளிப்பிராகாரத்தில் நின்றவாறே கோபால் த்வனிவர்த்தினியின்மூலம் பருகிப் பரவசமடைந்தான். மறுநாள் அரண்மனை வித்வானாக அங்கேயே இருந்துவிடும்படி லக்ஷ்மணனை சேஷண்ணா வேண்டிக்கொண்டு மகாராஜா அருளிய பெரிய நிதியொன்றையும் அவனிடம் அளித்தார். ''இவ்வளவு பணம் எனக்கு எதற்கு ஸ்வாமி! சங்கீதம் பயிலத் தொந்தரவுபடும் வித்யார்த்திகளுக்கு உதவுங்களேன். நான் ஒரு நாடோடி. நான் பெங்களூர் போய் வருகிறேன் சுவாமீ'' என்று லக்ஷ்மணன் சேஷண்ணாவிடம் பணிவாக விடை பெற்றுக்கொண்டான். அவனுடைய தியாகபுத்தியைக் கண்டு சேஷண்ணா ஆச்சரியமுற்றார்.

கோபாலனின் M. A. பரீக்ஷைக்கு ஒரு வாரம்தான் இருந்ததால் லக்ஷ்மணனை மாத்திரம் பெங்களூர் ரயிலில் ஏற்றிவிட்டான். பிரயாணத்தில் வழிநெடுகத் தோன்றிய மனோரம்யக் காட்சியானது லக்ஷ்மணனுக்கு இன்பத்தை அளிப்பதற்குப் பதில் துன்ப நினைவுகளைத்தான் நினைவு மூட்டிற்று.

''ஐயா, நான் பயின்ற வித்தையெல்லாம் உன்னுடையதப்பா. நீ அன்றைக்கு என்னை எச்சரித்திராவிடில் நான் திக்கில்லாத பரதேசியைப்போல் தெருத்தெருவாக அலைந்துகொண்டிருப்பேன். நீ இருக்கிறாய்—சிரஞ்சீவியாக இருக்கிறாய்! ஆனால் எங்கே இருக்கிறாய்?''...... துமரம் கரை கடந்துவிட்டது. ★ ★ ★

கோபாலனின் தந்தியைக்கண்டு வெங்கடேசனாலும் சாந்தாவாலும் நம்பவே முடியவில்லை. கோபால் ஏதோ வேடிக்கைக்காகவே தந்தி அடித்திருப்பான் என்று நினைத்தாலும், ஒருகால் உண்மையாக இருக்கலாமோ என்ற சபலத்தினால் வெங்கடேசன் காருடன் ஸ்டேஷனுக்குப் போனான். லக்ஷ்மணனைக்கண்டு பரம திருப்தியடைந்தான்.

'லச்சண்ணா!' என்று அலறின தங்கையை ஆதரவுடன் அணைத்துக்கொண்டான் லக்ஷ்மணன். பிறகு, அன்று முழுவதும் ஒருவருக்கொருவர் தாங்கள்பட்ட கஷ்டங்களைச் சொல்லிச்சொல்லி ஆறுதலடைந்தனர். லக்ஷ்மணன் தன் சிறிய தாயாரின் க்ஷேம சமாசாரத்தைப்பற்றி விசாரிக்காமல் இருக்கவில்லை.

சாந்தா செய்த ராஜோபசாரத்தைக் கண்டு, அவைகளை அங்கீகரிக்கத் தயங்கிய சாத்வீக பிராணி தமையனைக் கண்டு அவள் வருந்தினாள். அவனுடைய உடலின் ஒவ்வொரு ரத்த அணுவிலும் தியாகமும், விரக்தியும் நிலைத்திருப்பதைக் கண்ட சாந்தா அவன் மனது நோகாவண்ணம் அவனுக்கு இதமாக நடந்துகொண்டாள்.

லக்ஷ்மணன் ஊருக்கு வந்தது கண்டு சுந்தரராவ், பீமராவ் உள்பட வேண்டியவர்கள் எல்லாம் வந்து அவனைப் பார்த்து விட்டுப் போனார்கள். காயன சமாஜம், இந்த சபை, அந்த சபை என்று எல்லாவிடங்களிலிருந்தும் அவன் கச்சேரிக்கு அழைப்புகளும் வந்துகுவிந்தன. காயன சமாஜத்து காரியதரிசி ''தாங்கள் கவலைப்படவேண்டாம். தாங்கள் கேட்கும் சம்பாவனையைத் தருகிறோம்'' ''சங்கீதம் பணத்துக்குக் கிடைக்கக்கூடியதா சுவாமி? அதென்ன, கடைச்சரக்கா? என் குரு என்னை வீட்டில் வைத்துக் கொண்டு மகனைப்போல் வளர்த்து, கல்வி கற்பித்தார். அதை விற்றுக் காலம் தள்ளட்டுமா?''

''ஆனால் புரந்தரதாஸ் ஜயந்தியன்று பாடுவீரா?

''ஆகா, அவசியமாகப் பாடுகிறேன்''.

தினந்தோறும் ஊருக்குத் துலைவிலிருந்த நிர்ஜனபிரதேசமொன்றில் போய் உட்கார்ந்து தன் வேதனையனைத்தையும் அந்தச் செடிகொடிகளிடம் திறந்து காட்டுவான். மனந்திறந்து உருக்கமாகப் பாடுவான். ஒரு ராகத்தை எடுத்துக்கொண்டு பாடப்பாட அது ஊற்று நீர்போல் நீண்டுகொண்டே போகும். ''ஒரு ராகமே எனக்குச் சரியாக வரவில்லை. நான் எப்படி பாடகன் என்று சொல்லிக்கொள்வது, வெட்கக்கேடு!'' என்று நினைப்பான். இயற்கை லக்ஷ்மணனின் சங்கீதத்துடன் கலந்துவிடும்! அவன் சங்கீதத்தில் மெய்மறந்துவிடுவான்!.......

## 16

பரிக்ஷை முடிந்ததுமே கோபாலன் பெங்களூருக்கு வந்து, வெங்கடேசனுக்கு வாக்குக்கொடுத்தபடி திரிமே 'வீரகர்னாடகா' வின் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டான். காரியாலய வேலைபோக மற்ற வேளையை லக்ஷ்மணனுடனேயே கழிப்பான்.

ஒருநாள் சாந்தா ஓசைப்படாமல் லக்ஷ்மணனின் தம்பூராவைக் கொண்டுவந்து அவன் அறையில் வைத்துவிட்டுப் போனாள்.

தம்பூரிமைப் பார்த்ததும் அவனுக்குத் தன் பழைய நினைவெல்லாம் வந்தது. அதைக் கண்டு தான் விரும்பியது, அது தனக்குக் கிடைத்தது, எல்லாம் நினைவுக்கு வந்தது. இவ்வளவு நாளாக அதைப் பத்திரமாக வைத்திருந்த தங்கைக்கும், மாப்பிள்ளைக்கும் நன்றி கூறினான். அதை சுருதிகூட்டிப் பாட வாரம்பித்தான். லலிதமான ஸஹானாராகம், பாடுபவனின் வினயம் தைன்னியங்களுடன் ராகமும் மேளமாகி விட்டது—(இசைந்து விட்டது). லக்ஷ்மணனே 'அடேடே!' என்றான். அவனுடையபாடல் அவனுக்கே திருப்தியளித்தது. உடலில் புத்துயிர் உண்டாயிற்று. ராகத்தின் புதுப்புது ரூபங்கள் ஸங்கீதத்தைச் சோபிக்கச்செய்தன.

"கோபால்! இதுதான் உண்மையான சங்கீதம். நீ ஏன் பூர்வீமைப்பாடுவதே இல்லை?"

"பாடரேன்பா! ஒருநாள் அதைப்பாடரேன். சத்ய பூர்வீ ஏனோ என் வாயில் வரக்காணோம். ஒருநாள் அது என் இதயத்தைப் பிளந்துகொண்டு கிளம்பும்."

கோபாலன் 'வீரகர்நாடகா'வில் லக்ஷ்மணனின் சங்கீத வித்வத்தைப்பற்றி விவரித்தும், புகழ்ந்தும் பக்கம்பக்கமாக வரைந்து தள்ளினான். லக்ஷ்மணனின் புகழ் நாடெங்கும் பரவிற்று. இந்தப் புகழ்மொழிகளும், சங்கீத அழைப்புகளும் லக்ஷ்மணனின் அமைதியைக் குலைத்தன.

வெங்கடேசும், கோபாலும் சேர்ந்து ஆயிரக்கணக்கான நிதி சேர்த்து லக்ஷ்மணனுக்காக நவரத்தினங்களிழைத்த தோடா செய்வித்து ஒரு பெரிய சன்மான சபையில் அவனுக்கு வழங்கி கௌரவிப்பதற்கு பிரமாதமாக ஏற்பாடு செய்தார்கள். அந்த உத்ஸவத்துக்குத் தலைமைவகிப்பதற்குவைணிகசிகாமணிசேஷண்ணாவே ஒத்துக்கொண்டார்.

* *

அன் [redacted] மாலை பெங்களூரில் ஸர் புட்டண்ண செட்டி டௌன் ஹால் [redacted] ழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. உத்ஸவம் ஆறு மணிக்கு [redacted] தொடக்கம். ஆனாலுங்கூட நாலு மணியிலிருந்தே கூட்டம்கூட ஆரம்பித்துவிட்டது. வழக்கம்போல் பிரார்த்தனை அறிமுகம் எல்லாம் ஆனதும், கோபால் உத்ஸவத்தின் உத்தேசத்தை விவரித்து, லக்ஷ்மணராவ் கன்னட சங்கீதத்துக்கும் சாகித்தியத்துக்கும் தம் சங்கீத மகிமையால் செய்திருக்கும் பேருபகாரத்தை வர்ணித்தான். பிறகு, சேஷண்ணா அவர்கள் மனமார நாலு வார்த்தை சொன்னார். தனக்கும் லக்ஷ்மண ராவுக்கும் அறிமுகம் ஆன வரலாறு, அவர் மைசூரின் கௌரவத்தைக் காத்த விதம், மற்றும் அவர் பிரதிபைகளைப்பற்றிய புகழ்மொழிகளைக் கூறினார். வெங்கடேசன் அளித்த தோடாவை லக்ஷ்மணன் புறம்நீட்டி "இத்தகைய கௌரவங்கள் இவருக்கு ஆயிரம் ஆயிரம் வரட்டும்; இது என் வாழ்நாளின் பரம சுகமான நாள்." என்று சொல்லி முடித்தார். லக்ஷ்மணன் தோடாவைக் கையில் வாங்கிக்கொண்டதும் காது செவிடுபடும்படியான கரகோஷம்! அவன் கழுத்தில் பூமாலைகள் மேலும் மேலும் வந்துவிழுந்தன! எங்கும் ஜயகோஷம்!

"நீங்கள் என்னை ரொம்பவும் கௌரவித்தீர்கள். என் யோக்கியதைக்குமீறிய கௌரவம். குருக்கள் சேஷண்ணா அவர்களின்

திவ்வியமான வார்த்தைகளால் நான் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் உண்மையாக எதற்கும் ஏற்றவனல்ல. சங்கீதகலாபிமானி தேவதை என் ஆராத்ய மூர்த்தி. அவளுடைய சேவையில்வாழ்க்கையைப் பயன்செய்துகொள்ளவிரும்பும் ஒரு ஏழைப்பிச்சைக்காரன் நான். நான் இதுவரைக்கும், ஏதாவது வித்யையைக் காண்பித்திருந்தால் அந்தக் கீர்த்தி என் மூன்று குருக்களைச் சேரவேண்டியது. அவர்களில் சென்னப்பாவின் தரிசனலாபம் எனக்கு ஒரேஒரு தடவைதான் கிடைத்தது. அனந்தாசாரியார் அனந்த சாந்தி சுகத்தில் மெய்மறந்திருக்கிறார். என் புண்ணிய வசத்தால் தஞ்சாவூர் கிருஷ்ணைய்யர் உயிருடன் இருக்கிறார், அவருக்குதான் இந்தத் தோடாவின் கௌரவம் சேரவேண்டியது. இதை என் நமஸ்காரங்களுடன் அவருக்கு அனுப்பவேண்டுகிறேன்'' என்று அதை வெங்கடேசனிடம் கொடுத்துவிட்டான். லக்ஷ்மணனின் செயலைக் கண்டு சபையே ஆச்சரியத்தில் மூழ்கிற்று.

பிறகு, லக்ஷ்மணனின் கச்சேரி ஆரம்பமாயிற்று. அதி அற்புதமான கான வர்ஷம்! மணி ஒன்பதடித்தது. விளக்குக் கண் சிமிட்டிற்று. சபையோர் கைகடியாரத்தில் முள்ளைத் திருத்திக்கொண்டு அசையாமல் உட்கார்ந்துவிட்டனர். லக்ஷ்மணன் கானமுதத்தை ஊட்ட ஊட்ட, சபையோர் வீடு வாசலை மறந்து சங்கீதத்தில் லயித்துவிட்டனர். பஸவண்ணன் வசனம், கனகதாஸரின் கீர்த்தனை, புரந்தரதாஸரின் தேவ நாமம், அக்கமஹாதேவியின் வசனம்,......லக்ஷ்மணனின் கலாதர்மமானது ஜாதி மதங்களை மீறிவிட்டது. தன் மேன்மையால் அகண்டத்தின் ச்ரேஷ்டத்வத்தை அடைந்துவிட்டது. முன்னேக்கின் அந்த மட்டத்தில் புரந்தரதாஸ், கனகதாஸ், பிரபுதேவர், பஸவண்ண, மகாதேவி அக்கா எல்லோரையும் சமநோக்குடன், சமான பக்தியுடன் கௌரவிக்கலாம் என்று லக்ஷ்மணன் காட்டிக்கொடுத்தான்.......ஆனந்த பைரவியை முடித்த லக்ஷ்மணன் திடீரென்று ஏதோ அபூர்வ சக்தியால் தூண்டப்பட்டவன்போல் பூர்வீயைப் பாடவாரம்பித்தான், கோபாலன் திடுக்கிட்டான். வெங்கடேசனை யாரோ அடித்து எழுப்பினமாதிரியாயிற்று. பூர்வீ தன் அமர வைபவத்துடன் பிரகாசிக்க ஆரம்பித்தது! முன்பே அமைதியான சூழ்நிலையில் தைவீக அமைதியும், காம்பீர்யமும் நிலவின. பக்கவாத்தியக்காரர்கள் அவனுடன்கூட வாசிக்க முடியாமல் நிறுத்திவிட்டனர். ராகம் முதலாம் காலத்திலிருந்து இரண்டாம் காலத்தை எட்ட லக்ஷ்மணனின் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது.

சபையோர் கைகூப்பினர். சாக்ஷாத் சரஸ்வதியே அன்று தங்களுக்கு அனுக்கிரஹித்திருக்கிறாள் என்று பாவித்தனர்.

இரண்டாங்காலம், மூன்றாங்காலமாயிற்று. லக்ஷ்மணனின் கண்கள் உலர்ந்தன. ராகம் முடியும் வேளைக்குத் தம்பூராவின் தாரக ஷட்ஜத்தின் தந்தி அறுந்தது. அந்த ரீங்காரமானது சபையோரை ஆச்சரியப்படுத்தியது. தம்பூரா லக்ஷ்மணனின் கையிலிருந்து நழுவி விழுந்தது. லக்ஷ்மணனும் அதனுடன் கூடவே

நிலத்தில் உருண்டான்......"ஐயா......" என்ற இரண்டே அக்ஷரம் எல்லோர் காதுக்கும் எட்டிற்று. அதான் மங்களம். கச்சேரி முடிந்தது. பாடகன் சந்தியாராகத்தில் தன் ஆத்ம பிரணதியை மிதக்கவிட்டான். முன்னால் வரவிருந்த கும்பிருட்டுக்கு அந்தப் பிரணதிதான் தேஜஸ் கொடுக்கும் விளக்கு. தன் வாழ்க்கையின் சந்தியாராகத்தைச் சொல்லி முடித்தான். மறுகணமே உதய ராகத்தின் அழைப்பு!

சந்தியாராகம் எல்லோர் செவியிலும் விழுந்தது. ஆனால் உதயராகம் கேட்கப்பட்டது லக்ஷ்மணன் ஒருவனுக்கே!

முற்றிற்று.

---

# கடல் கடைந்த கல்கி

வை. மு. கோ.

(பிப்ரவரி இதழ்த் தொடர்ச்சி.)

மாபெருங் காங்கிரஸ் சென்னையில் நடக்கும்போது ஜல சமுத்திரத்தைவிடப் பெருக்கமுள்ள ஜன சமுத்திரத்தைக் கண்டு உலகமே வியப்புற்றது என்றாலும் உண்மையை விசித்திரத்தை—ஸாரத்தை—அப்படியே க்ரஹித்துப் பரிபூர்ணமாக ரஸிக்கும் மகாநுபாவன் கல்கி க்ருஷ்ணமூர்த்தி இல்லையே!....என்கிற குறை கட்டாயம் அவருடைய அபிமானிகளின் உள்ளங்களில் தோன்றி வருத்தாமலில்லை.

காங்கிரஸின் உண்மையைத் தமது அத்புதமான தனிப் பெருமை வாய்ந்த நடையில் எழுதி ப்ரசாரம் செய்து மக்களுக்கு தேச பக்தியை உண்டாக்கியவரை யாரால்தான் மறக்க முடியும்? இச் சந்தர்ப்பத்தில் 1933-ம் ஆறு நடந்த பம்பாய் காங்கிரஸின் நினைவுகள் என் மனத்தில் திரைப்படம்போல் ஓடி உத்ஸாகப்படுத்துகின்றன.

பம்பாய் காங்கிரஸுக்கு நானும் ஸ்ரீமதிகள் அம்புஜம்மாள், ஜானம்மாள் ஆகிய ஆப்த ஸகோதரிகளும் சென்னை ராஜதானியின் ப்ரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெகு உத்ஸாகத்துடன் கிளம்பினோம்.

[நான் ஆதிகாலம் முதல் வெகு முக்யமான டயரி எழுதும் முறையைக் கைக்கொள்ளாதது ஒரு மகத்தான குறை என்பதை நான் இப்போது பல சந்தர்ப்பங்களில் எண்ணி வருந்துகிறேன். சரியானபடி மாதம், தேதி, ஊர், இடம், மனிதர்கள் எல்லாம் கூடுமானவரையில் நினைவிலுள்ளதைக் கொண்டு தான் எழுத வேண்டியிருக்கிறது. இதனால் சில விஷயங்கள் முன்னது பின்னதாகக்கூட இருக்கக்கூடும். அதற்காக வாசகர்களிடம் மன்னிப்பை முதலிலேயே கோருகிறேன்.]

நாங்கள் பம்பாய் காங்கிரஸ் ப்ரதிநிதிகளாக மட்டும் செல்வதாகத் தோன்றாமல் மகாத்மா காந்தியடிகள் போன்ற

தலைவர்களின் தரிசனத்திற்காக ஏதோ ஒரு சொர்க்கத்திற்கே செல்வதாகத் தோன்றியதே யன்றி மற்றப்படி சாதாரணமாகத் தோன்றவே இல்லை. நாங்கள் ஏறியிருந்த வண்டிக்குப் பக்கத்து வண்டியிலே நமது பாரத நாட்டுத் தவப்புதல்வர் ராஜாஜி, கல்கி, ஆர். பி, "ஹரிஜன்" சாஸ்திரி இன்னும் பலரும் ஏறியிருந்தார்கள். நாங்கள் சின்னப் பெட்டியாகப் பார்த்து ஏறியிருந்தோம்; வண்டி கிளம்பும்போது எங்கள் உத்ஸாகமும் கூடவே கிளம்பிவிட்டதால் வெகு குஷியுடன் ஏதேதோ பாட்டுக்களைப் பாடத் தொடங்கிவிட்டோம். ரயிலின் ஓசையே எங்களுக்கு ச்ருதி போட்டதுபோலாகியது! அதன் 'ஜிக்ஜிக்' சப்தமே தாளமாகிவிட்டது! இனி கேட்க வேண்டுமா?...ஒரே கோலாகலந்தான்!

சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு குடும்பம் அப்படியே வந்து நெருக்கியடித்துக்கொண்டு வந்து ஏறிவிட்டார்கள். இந்தச் சின்னப்பெட்டியில் இடம் இல்லையே என்று சொல்லியும் கேட்கவில்லை. மிகவும் ஏழ்மையில் இளையும் குடும்பம். அவர்களுடைய பரிதாப நிலையின் பலன் இடம் கொடுக்கவே செய்துவிட்டது. சுமார் 11 மணி சமயத்திற்கு நாங்கள் ஆகாரம் செய்ய ஆயத்தமானோம்.

தோசை, இட்லி, தயிர்சாதம், புளியோதரை இவைகளைத் தவிர பக்ஷணங்கள் முதலியன நாங்கள் கொண்டு வந்திருந்தோம். ஜானம்மாளின் சகோதரருடைய புதல்வி சிறுமியும் எங்களுடன்கூட வந்திருந்தாள். ஒரு பலகையைக் காலிசெய்துகொண்டு ஆகாரங்களில் சிலவற்றை எடுத்து வைத்தோம். கூட ஏறியிருக்கும் குடும்பத்தில் 10 வயதுடைய பையன் ஒருவன், அவன் தம்பி, அங்கதன் மற்றொருவன்!... இவ்விரண்டு பிள்ளைகளும் வைத்த கண் வாங்காமல் எங்கள் இலைகளையும் சாப்பாடு வைத்துள்ள பாத்திரங்களையுமே பார்த்த கண்ணராவியை நினைத்தால் இப்போதுகூட மனங் கலங்குகிறது. "அம்மா பசிக்கிறதே!" என்ற பல்லவியைத் தாயாரின் முகத்தைப் பார்த்தபடியே இந்த இடத்தைவிட்டு அசையாமல் நின்று கேட்கத்தொடங்குவதற்கு முன்பே நாங்கள் ஆளுக்கொரு தோசை, இட்லி முதலியன கொடுத்தோம்.

இப்படிக் கொடுத்து அப்படித் திரும்புவதற்குள் அதைக் காலி செய்துவிட்டு "என்னமாமீ! இத்துனூண்டு குடுத்தால் போருமா? இன்னும் வேணும்" என்ற பாட்டைப் பலமாகப் பாடினார்கள். "இதென்னடா கஷ்டகாலம்! நாம் ஏதோ சொல்பமாய் திட்டமாய்க் கொண்டுவந்திருப்பது இந்த வேளைக்கே சரியாகிவிடும்போலிருக்கிறதே" என்று நாங்கள் பேசிக் கொண்டோம்.

பெற்றவர்கள், பாவம்! இந்தப் பக்கமே திரும்பவுமில்லை; குழந்தைகளைக் கூப்பிடவோ சமாதானம் செய்யவோ, ஒன்று

மில்லை. எங்கள் பாடுதான் தர்ம சங்கடமாகிவிட்டது. நாங்களும் சாப்பிட்டதாகப் பேர் பண்ணிவிட்டு மூடிவிட்டோம். பகல் 1 மணி சுமாருக்கு ஒரு ஸ்டேஷனில் வண்டி நிற்கும்போது, "சாப்பாடு யாருக்கு வேண்டும்? அடுத்த ஜங்ஷனில் கொண்டுவருவோம்" என்று ஒருவன் வந்து கேட்டான்.

அதே சமயம் பக்கத்து வண்டியிலிருந்து ஸ்ரீமான் கல்கி, ஆர். பி. இருவரும் இறங்கிவந்து எங்கள் வண்டியருகில் நின்று, "சாப்பாட்டுக்கு புக் செய்துவிடுகிறோம்" என்று கேட்டார்கள். அதற்குள் கல்கி சிரித்துக்கொண்டே, "எத்தனை சாப்பாடு சொல்லவேணும்?" என்றார். ஆர். பி. கண்ணைச் சிமிட்டியவாறு என்னைச் சுட்டிக்காட்டி, "இந்தம்மாள் ஐயங்கார் பூதஞ்சி செய்வார்கள், ஸார்!.... புளியோதரை வாஸனை அடிக்கிறாப்போல் தோணுகிறது"...என்று தமாஷ் செய்தார். அதற்குள் கல்கி, "ஓகோ! அப்படியானால் புளியோதரை, தயிர் சாதம் எல்லாம்கூட காங்கிரஸ் ப்ரதிநிதிகளாக வருகிறாப்பலே இருக்கு; சரி! அந்த சாமான்களை அடுத்த வண்டிக்குத் தள்ளிவிடுங்கள்! உங்களுக்கு பஸ்டு க்ளாஸ் மீல்ஸ் ஆர்டர் செய்துவிடுகிறோம்!" என்று கூறிச் சிரித்தார்கள்.

"ஸார்! எங்களுடன்கூட ப்ரதிநிதிகளாக ஒரு குடும்பத்தின் பசியும் அப்படியே வண்டியில் ஏறிவிட்டது; அதற்காக ரெண்டு சாப்பாட்டுக்கு ஜானம்மாள் ஆர்டர் கொடுத்துவிட்டார்" என்று வண்டியிலுள்ள வ்யக்திகளைக் காட்டினேன். "ஐயோ பாவம்! இதெல்லாம் நேருக்கு நேர் அநுபவத்திற்கு ஏற்பாடாகிவிட்டது"...என்பதற்குள் மணியடித்துவிட்டதால் அவர்கள் தங்கள் வண்டியில் ஏறினார்கள்; வண்டி நகர்ந்துவிட்டதால் ஆர். பி. யும் மற்றொரு சகோதரர்—இப்போது பேர் மறந்துவிட்டது—இருவரும் எங்கள் வண்டியிலேயே ஏறிவிட்டார்கள்.

அடுத்த ஜங்ஷனில் வண்டி நின்றதும் ஆர்டர்செய்திருந்தபடி சாப்பாடு வந்துவிட்டது. வந்த சாப்பாட்டை அந்த இரண்டு பிள்ளைகளுக்கும் வைத்துச் சாப்பிடும்படி நாங்கள் சொல்லியதுதான் தாமதம், காய்ந்தமாடு கம்பங்கொல்லையில் விழுந்ததுபோல் பறக்கப்பறக்க ஓரே இழுப்பில் இழுத்துவிட உட்கார்ந்தார்கள். அடுத்த க்ஷணமே அந்தப் பையன்களின் தகப்பனார் ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து, "சேச்சே! கண்ட எச்சிலும் உள்ள அநாசார ஓட்டல் சாப்பாட்டை சாப்பிடுகிறீர்களா! சீச்சீ! எழுந்து வாருங்கள்! இவர்கள் காங்கிரஸ்காரர்கள் அதான் இப்படி ஆசாரமில்லாமல் செய்கிறார்கள்!" என்று எங்களுக்கும் சேர்த்து ஒரு டோஸ் கொடுத்து பிள்ளைகளின் முதுகிலும் தும்பு தட்டினார், பாவம்!

உண்மையில் எங்களுக்கு எரிச்சலாகவே வந்தது. "பிடிச்சுப்போட பிண்டமில்லை, கடிபுடிக்கு பஞ்சமில்லை!" என்கிற

பழமொழிப்படிக்கு இருக்கும் மனிதனைப் பார்த்து மிகவும் கோபமே வந்தது. ஒரு பையன் பயந்துகொண்டு சாப்பிடவில்லை. ஒரு பையன் கண்ணுங் கருத்துமாய் வேலையிலீடுபட்டுவிட்டான். மனைவி பாபம்! ஒன்றும் சொல்லவும் முடியாமல் தாளவும் முடியாமல் முதலில் தவித்தாள், பிறகு தைரியத்துடன், இதென்ன அநியாயம்? நமக்குத்தான் வாங்கிக் கொடுக்க விதி இல்லை என்றால் 'ஊரோ, தாயோ' என்று கொடுப்பதைக்கூடத் தடுத்துவிட வேண்டுமாஎன்ன? 'குழந்தைகள் பசியோ? கொள்ளித் தேளோ?' என்பார்கள்; நேற்று மத்யானம் சாப்பிட்ட பசங்களுக்குப் பசிக்காதா?" என்று தன்னையும் மீறித் தாயுள்ளத்துடன் சொல்லிவிட்டதுதான் தாமதம்!... மதிகெட்ட மூர்க்கமனிதன் கோபந்தாளாமல் ரயில் வண்டி என்பதையும், கூட அன்னியர் இருப்பதையும் மறந்து மனைவியை அடித்துவிட்டதோடு, "பட்டினி என்னடி பட்டினி!...அப்படிப் போரப்ராணன் போகட்டுமே! செத்தால் முழுகிவிட்டதோ!" என்று தாறுமாறுமாக உளறியதைப் பார்த்து ஜானம்மாளும் கோபத்துடன் ஏதோ சில கேள்விகள் கேட்டுவிட்டாள்.

அதே சமயம் "பக்கத்து வண்டியில் புளியோதரை கேக்கறா" என்று சொல்லிக்கொண்டு ஒரு சகோதரர் வந்தார். உடனே ஜானம்மாள் கொண்டுவந்துள்ள சகல பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் வைத்துத் தட்டுடன் கொடுத்தார்கள். ஆர். வி. சாஸ்திரியின் மனைவியும்கூட வந்திருந்தவர் எங்கள் வண்டியில் வந்து சிறிது உட்கார்ந்தாள். இங்கு நடந்த சகல விஷயத்தையும் சொன்னோம். அவருக்கும் வியப்பாகிவிட்டது. பிறகு வண்டியும் கிளம்பும் மணி ஓசை கேட்டதும் அவர் இறங்கிப் போய்விட்டார்.

நாங்களும் ஆகாரம் செய்தோம், மாலை நாலுமணி சுமாருக்கு காப்பிக்காக ஒரு ஸ்டேஷனில் வண்டி சிறிது நேரம் நின்றது. ஆர். பி. யும் கல்கியும் வந்து "காப்பிக்கு...என்று அவர்கள் சொல்வதற்குள்ளேயே, ஜானம்மாள் "எங்களுக்கு பம்பாய் போய்ச் சேருகிறவரையில் காப்பி இருக்கிறது; வேண்டுமானால் நீங்களும் சாப்பிடலாம்" என்றார்.

"அடேடே! காப்பிக்குக்கூட ஓட்டல்கூடாதா? கொண்டு வந்த காப்பி எப்படி நன்றாக இருக்கும்?" என்றார். "கொண்டு வரும் பக்குவப்படிக்குக் கொண்டுவந்தால் ஏன் கெட்டுப் போகும்? நல்ல முதல்தரமான டிகாக்ஷனைச் சர்க்கரை, பால் சேர்க்காமல் ப்ளாஸ்கில் கொட்டிக்கொண்டு வந்தால் இரண்டு நாட்கள்கூட இருக்கும். பாலும் சர்க்கரையும் கலந்து எடுத்துக்கொண்டால் சரியாகிவிடும்" என்று ஜானம்மாள் சொல்லியவாறு காப்பி கலந்தும் கொடுத்தார்.

இருவரும் மிக்க சந்தோஷப்பட்டதோடு "இந்தப் பிள்ளைகளுக்கு காப்பிவேணுமா?" என்றூர். "ஐயோ! உரக்கப் பேசாதீர்கள்! நாங்கள் காங்கிரஸ்காரர்களாம்!... அனுசாரப் பிண்டங்களாம்!... தங்கள் குமாரர்கள் பட்டினிகிடந்து சாகலாமாம்; ஓட்டலில் சாப்பிடக் கூடாதாம். சாப்பாட்டை நாங்கள் வரவழைத்துக் கொடுத்ததற்கு காங்கிரஸ் பிரதிநிதி என்கிற பட்டத்தோடு இந்தப் பட்டமும் வந்தது பெரிய மகிழ்ச்சியல்லவா?" என்று நடந்த விஷயத்தைச் சொன்னேன். அவர் மிகவும் வியப்புடன் அந்தக் குடும்பத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "நம்மைப் போன்றவர்களுக்கு இத்தகைய அனுபவங்கள் அவசியம் தேவையல்லவா? அதனுல் கிடைத்துவிட்டது. இது உங்களுக்கு லாபந்தானே!" என்றூர்.

இதற்குள் மறுபடியும் வண்டி புறப்படும் மணி யடித்து விட்டதும் அவர்கள் போய்விட்டார்கள். அந்தக் குடும்பத்தினர் வாடவாட உட்கார்ந்திருப்பதைக் கண்டு சகிக்காமல் வாழைப்பழத்தை ஒரு டஜன் வாங்கிக் கொடுத்ததோடு நாங்கள் கொண்டுவந்த தயிர் சாதத்தையும புளியோதரையையும் அந்தப் பிள்ளைகளுக்கு அப்படியே கொடுத்து விட்டோம்.

மறுநாள் காலை பூனு ஸ்டேஷனில் ஜானம்மாளின் உறவினர் ஒருவர் சுடச்சுட காப்பியும் பலகாரங்களும் கொண்டு கொடுத்துவிட்டு எங்களுடன் வந்த சிறுமியை அழைத்துக் கொண்டுபோய்விட்டார்கள். எங்களுக்கு வந்த பலகாரங்களில் கொஞ்சம் பக்கத்து வண்டிக்கு அனுப்பினேம். வாடவாடக் கிடக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்தோம். ஒருவாறுக ப்ரயாணம் முடிந்து பம்பாய் போய்ச் சேர்ந்தோம். எங்களைத் தமிழ்நாடு ப்ரதிநிதிகள் இறங்கும் விடுதியில் கொண்டு இறக்கினூர்கள். அடுத்த வண்டிக்காரர்கள் எங்கு இறங்கினூர்கள் என்று எங்களுக்குத் தெரியாது.

காங்கிரஸ் மகாநாட்டிற்கு நாங்கள் சென்று திரும்பி வந்தவரையில் எத்தனையோ விஷயங்களில் நாங்கள் ஒரே கொண்டாட்டமாய் குதூகலமாயிருந்தோம்; ஆனுல் அவைகளை இங்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை; ஸ்ரீமான் கல்கி சம்மந்தப்பட்ட விஷயங்களை மட்டும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் மகாஸபை ஆரம்பிக்க இரண்டு நாட்கள் முன்னதாகவே நாங்கள் போய்ச் சேர்ந்துவிட்டதால் அந்த இரண்டு நாட்களும் காங்கிரஸ் நகரைச் சுற்றிப் பார்க்கவும் தலைவர்களின் தனித்தனி விடுதிகளைப் பார்க்கவும், அண்ணல் காந்தியடிகளின் தனி விடுதியில் சந்திக்கவும், ஊரைச்சுற்றிப் பார்க்கவும் சரியாகிவிட்டது.

காங்கிரஸ் ஆரம்பத்தன்று விஷ்ணுபந்த்பக்னீஸ் இரட்டைத் தம்பூராவுடன் வந்தேமாதர கீதம் பாடிய ஒரு பேரானந்தம் இத்தனை வருஷங்களாகியும் இன்னும் என்காதில் ஒலிக்கிறது. அன்று இரவு காங்கிரஸ் மண்டபத்தில் ஆர். பி. யை மட்டும் தற்செயலாகப் பார்த்தோம். அப்போது அவர் ''க்ருஷ்ண மூர்த்தி உங்களை எல்லாம் பார்க்கவேண்டுமென்றார். காலையில் சந்திக்கிறோம்'' என்று சொல்லிச் சென்றார்.

அதேபோல் மறுநாள் அதிகாலையில் நாங்கள் காந்தியின் விடுதியில் நடந்த ப்ரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வந்தபிறகு கல்கியை எங்கள் விடுதியில் சந்தித்தோம்; அவர் சொல்லியதாவது; ''நேற்று ப்ரார்த்தனைகீதம் வெகு அத்புதமாயிருந்தது. பம்பாயில் நடப்பதால் இந்த ஊர்க்காரர்கள் பாடியது நியாயம். தமிழ் நாட்டவருக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் கேட்டுச் சண்டை செய்தோம். இன்று மாலையில் பாரதியார் பாடல்கள் பாரத சமுதாயமும் முன்னர் இலங்கையும் என்ற இரண்டையும் நீங்கள் மூவரும் சேர்ந்து பாடவேண்டும். நம் தமிழ்நாட்டுக் கவியரசர் பாரதியாரின் பாடலையும் கவுரவித்துத் தமிழ் நாட்டினர் பாடும் உரிமையையும் காக்கவேண்டும். நீங்கள் மாலையில் நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன்னமேயே வந்து விடுங்கள்'' என்றார்.

எங்களுடைய சந்தோஷம் கரைபுரண்டுவிட்டது. நானும் அம்புஜம்மாவும் ஜானம்மாவும் சேர்ந்து ஒரே குதிகுதித்தோம். ''கட்டாயமாய் இந்தக் காரியத்தை நீங்கள் செய்ய முன் வந்ததுபற்றிப் பெருமை யடைகிறோம்'' என்றேன். ''இதே பாரத சமுதாயம்; என்கிற பாட்டை வடநாட்டுக் கோகிலமாகிய ஸரோஜினிதேவி மூன்று நான்கு தடவைகள் கோதையைப் பாடச் சொல்லிக் கேட்டு மிகவும் சந்தோஷப் பட்டிருக்கிறாள். என் தாயார்தான் ஸரோஜினிக்கு இந்தப் பாடலின் அர்த்தத்தை மொழி பெயர்த்துச் சொன்னார். ஆகையால் அந்தப் பாட்டை வடநாட்டார் ரஸிப்பார்கள். நீங்கள் பொருக்கி எடுத்ததுபற்றி சந்தோஷம்'' என்று ஸ்ரீமதி அம்புஜம்மாள் தெரிவித்தார்.

கல்கியும் சிறிது நேரம் பொதுவாகப் பேசிக்கொண்டிருந்தார். அதே சமயம் கமலாதேவி சட்டோபாத்யாயாவும், இன்னும் சிலரும் ஒவ்வொரு ப்ரதிநிதிகளுக்கும் என்ன சவுகர்யங்கள் தேவை...என்று தனித்தனியே வந்து விசாரித்துக்கொண்டு போனார்கள். ''சரி! மாலையில் நாம் அங்குச் சந்திப்போம்'' என்று சொல்லிச் சென்றார். அதன் பிறகு நாங்கள் மூவரும் சேர்ந்து அந்த இரண்டு பாட்டுக்களையும் பாடிப்பாடிப் பார்த்துக்கொண்டோம்,

மாலையில் வெகு சீக்கிரம் நாங்கள் பந்தலுக்குப் போய் விட்டோம். முதலில் ஆர். பி: தான் எங்களை சந்தித்து ஒரு இடத்தைக் காட்டி, "இங்கு இருங்கள்; சமயத்திற்கு நாங்கள் கூப்பிடுகிறோம்" என்றார்.

அதேபோல் உட்கார்ந்திருந்தோம். கூட்டமோ பொங்கி வருகின்றது. எங்களை எப்போது கூப்பிடுவார்கள்?...என்று நாங்கள் காத்திருந்தோம். ஆனால், ப்ரார்த்தனைகீதம் வேறு யாராலோ ஆரம்பிக்கப்பட்டுவிட்டது! இந்துஸ்தானிதான் பாடினார்கள். நாங்கள் ஏமாற்றத்துடன் ப்ரமித்துவிட்டோம். எங்களிடம் கல்கியோ, மற்ற யாருமோ வரவே இல்லை. மகாநாடு தொடங்கி பாதி நடக்கும் சமயம் கல்கி வந்தார். அவருக்கும் மனத்தாங்கல், கோபம் எல்லாம் ஜ்வலித்தது. "நாங்கள் எத்தனையோ முயற்சியுடன் ஏற்பாடு செய்ததெல்லாம் வீணாகி முதலில் பாடுவதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பதாகச் சொல்லியவர்கள் சடக்கென்று மாற்றிவிட்டார்கள். காரணம்; நம் நாட்டின் ஒற்றுமையற்ற பலவீனந்தான்; தமிழ் நாட்டுக் கவியைத் தமிழ் நாட்டார் பாடுவது என்றால் மற்றவர்களுக்குப் பொறுக்குமா? ஆந்திரர், கன்னடர், மலையாளர், ஸௌராஷ்டரர்...இப்படியாக எத்தனை பாஷைகள் உண்டோ அத்தனை பேர்களும் பாடவேண்டும் என்று இதையே ஒரு சண்டையாகக் கிளறிவிட்டு விட்டார்கள். ஒவ்வொருவரும் பாடுவதென்றால் அர்த்தமே இல்லை. காங்கிரஸ் மகாநாட்டிற்குப் பதில் பாஷா சங்கீத நிகழ்ச்சி மன்றமாகிவிடும்! இந்தப் போராட்டமே வேண்டாம். வடதேசத்துப் பாஷையையே பாடிவிடட்டும்; வீண் ரஸாபாஸம் வேண்டாம்; என்று முடிவாகிவிட்டது; கடைசி தினம் மங்களமாவது பாடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்படி செய்ய எண்ணினேன்; அதுவும் போயிற்று" என்று சலிப்புடன் சொல்லி வருந்தினார்; கடைசி நாளாவது சகலமும் முடிந்தபிறகு எப்படியாவது பாடச் செய்யவேண்டும் என்று ப்ரயத்தனப் பட்டார்கள்; கூட்டம் முடிவடைவதற்கே வெகு நேரமாகிவிட்டதால் நினைத்தபடி நடக்கவில்லை; தவிர, கடைசி தினத்தன்று, "பம்பாய்க்கு மிகச் சமீபத்திலுள்ள எலிபெண்டா கேவ்ஸ் என்கிற இடத்தைப் போய்ப் பார்ப்பதற்காக கல்கி முதலியவர்கள் ஏற்பாடுசெய்திருப்பதால் நீங்களும் வருகிறீர்களா?" என்று ஆர். பி. வந்து கேட்டார்; நாங்கள் உடனே ஒப்புக்கொண்டு வெகு மகிழ்ச்சியுடன் தயாராகிவிட்டோம்.

(தொடரும்)

---

ஜகன்மோகினி, 32-வது ஆண்டு, 1955
தனிப்பிரதி அணா 4. வருடச் சந்தா ரூ. 3. (வெளிநாடு ரூ. 3-12)

# ஆன்ம தத்துவம் (ஆன்மாவின் இயல்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
முன்னைத்தலைமைத் தமிழ் ஆசிரியை,
சென்னை லேடிவில்லிங்டன் உயர்தரக் கலாசாலை.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அவ: ஆன்மா, இங்ஙனம் கண்ணிற்குப் புலப்படாததாயும், அசித்திற்கு வேறுபட்டதாயும், அவயவங்கள் உருவவேறுபாடு ஆகிய இவைகள் அற்றதாயும் இருத்தலின், இஃது அசித்தோடு ஒவ்வாத பொருளாயிருக்குமென்கிறார்.

மூலம்: **22.** இப்படியிருக்கையாலே சஸ்த்ரம், அக்நி, ஜலம், வாதம், ஆதபம், தொடக்கமானவற்றால் சேதித்தல், தஹித்தல், நனைத்தல், சோஷிப்பித்தல் செய்கைக்கு அயோக்யமாயிருக்கும்.

பொருள்: ஆன்மாவின் தன்மை இதுவாகலின், ஆயுதங்கள், நெருப்பு, தண்ணீர், காற்று, வெப்பம் முதலியவற்றால் முறையே வெட்டுதல், எரித்தல், நனைத்தல், உலரவைத்தல் ஆகியவற்றைச் செய்தற்குத் தகுதியற்றதாயிருக்கை.

விளக்கம்: மேற்கூறிய பொருள்கள் ஆன்மாவை அழிப்பதாயின், அதன் உட்புகுந்தே செய்ய வேண்டுமாகையாலும், ஆன்மா அப்பொருள்கள் ஒவ்வொன்றிலும் உட்புகுந்துள்ள மிக்க நுண்ணிய பொருளாகையாலும், பருமனான அவைகள், நுண்ணிய இவ்வான்மப்பொருளின் உள்நுழைந்து அழிக்கும் வன்மையற்றுள்ளன.

அவ: இங்ஙனம் விகாரமற்றதாயுள்ள ஆன்மாவிற்கு, அளவு உண்டு எனச் சொல்லும் ஜைநர் சித்தாந்தத்தை இச்சூத்திரத்தில் காட்டுகிறார்:

மூலம்: **23.** ஆர்ஹதர் ஆத்மாவை தேஹபரிமாணன் என்றார்கள்.

பொருள்: ஜைநர், உடல் எந்த அளவில் உள்ளதோ, அந்த அளவுடையதாகவே ஆன்மாவும் உள்ளது என்கின்றனர்.

விளக்கம்: எறும்பிற்கு எறும்பளவு ஆன்மாவும், யானைக்கு யானையளவு ஆன்மாவும் உள்ளது என்பது அவர்கள் கருத்து. 'இன்றேல், ஒரே காலத்தில் ஒருவருக்கே தலை வலித்தலும், காலில் வலியின்றிச் சுகமாயிருத்தலும் எப்படிக்கூடும்?' என வாதிக்கின்றனர்.

அவ: இக்கருத்தை மறுக்கிறார்:

மூலம்: **24.** அது ச்ருதி விருத்தம்.

பொருள்: இது, வேதக் கருத்திற்கு மாறானது.

விளக்கம்: ஏனெனில் வேதத்தில், ஆன்மா அணுவளவாயுள்ளது என்றும், இந்திரியங்களால் அறியப்படாதது என்றும், செந்நெல்லின் வால்நுனியினுடைய நூற்றிலொரு பங்களவாக இருக்கிறதென்றும் சொல்லபடுகிறது.

அவ: ஜைநர் கருதுமாறு உடலளவிற்கேற்ப ஆன்மா உள்ளது எனச் செப்பின், ஏற்படும் குற்றத்தை அருளிச்செய்கிறார்:

மூலம்: 25. அநேக தேஹங்களை பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு சைதில்யமும் வரும்.

பொருள்: உடலளவே ஆன்மா இருப்பதென்னில், ஒரே பிறவியில் ஒரே காலத்தில் அநேக உடல்களை ஏற்கும் யோகிகளுடைய ஆன்ம இலட்சணத்திற்கு (சொரூபத்திற்கு)ச் சிதைவு (சைதில்யம்) வரும்.

விளக்கம்: அங்ஙனமாயின், முற்கூறியவாறு யோகத்தில் வல்லுநரான ஸௌபரியைப் போன்று, ஒரே காலத்தில் பல சரீரங்களை ஏற்கின்றவர்களுக்குத் தங்கள் ஆன்ம சொரூபத்தை அநேக பிரிவுகளாக்கிக்கொண்டு அந்தந்த உடலங்களை ஏற்க வேண்டிவரும். அன்றியும், கூடுவிட்டுக் கூடுபாய்தல் மூலமாகப் பல சரீரங்களை ஏற்கும் யோகிகள், முன் ஆன்மா இருந்த தூல உடலை விட்டுவிட்டு நுண்ணிய (சூக்கும)உடலை வகிக்குங்கால், இவ்வான்மாவிற்கு அச்சிறு உடல் போதியதன்றாதலின், ஆன்மாவிற்குச் சைதில்யம் வரும்.

அவ: ஞானத்திற்கு ஆசிரயம் என்றால் என்ன? என்பதைத் தெரிவிக்கிறார்:

மூலம்: 26 ஜ்ஞாநாச்ரயமாகையாவது-ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை.

இதற்குச் சிறிது விளக்கமாகவே பொருள் சொல்லவேண்டியுள்ளது. விளக்கு அதன் ஒளி ஆகிய இரண்டும் ஒளிவாய்ந்த பொருள்களேயாயினும், எங்ஙனம், விளக்கு அதன் ஒளிக்கு இருக்கையாயிருக்கின்றதோ, அங்ஙனமே ஆன்மாவும் அதன் தருமமும் ஞானவடிவாயிருப்பினும் தன் தருமமான ஞானத்திற்கு இருப்பிடமாயுள்ளது. இதனால், ஆன்மா ஞானவடிவனாயிருத்தல் மட்டுமேயல்லாமல் ஞானத்திற்கு இருப்பிடமாகவுமிருக்கிறான் என அறிகின்றோம்.

அவ: இங்ஙனம் சொல்லப்பட்ட ஆன்மா, ஞானத்திற்கு இருப்பிடமாயுள்ளது என்பதை ஒப்புக்கொள்ளாமல், "அது ஞானமாக மட்டும் உள்ளது" எனச் சொல்லுகிற பௌத்தர் முதலியவர்களைக் கண்டித்தற்காக அவர்கள் கருத்தை விளக்கிச் சொல்லுகிறார்:

மூலம்: 27. ஆத்மா, ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமன்றிக்கே ஜ்ஞாநமாத்திரமாகில்;

பொருள்: ஆத்மா, ஞானத்திற்கு இருப்பிடமாயிராமல், ஞானமாகவே இருக்குமாகில்,

அவ: இவர்கள் கொள்கையைக் கண்டிக்கிறார்:

மூலம்: 28. நான் அறிவு என்று சொல்லவேணும். நானறியா நின்றேன் என்னக்கூடாது.

பொருள்: ஆன்மாஞானத்திற்கு இருப்பிடமாயில்லாமல், கேவலம் ஞானமாகவே இருக்குமாயின், 'நானறிவு' என்று தன்னை ஞான

மாத்திரமாகவே சொல்லுவதொழிய, நான் இத்தை அறியா நின்றேன் என்று தன்னை ஞானமுடையவனாகச் சொல்லுதல்கூடாது.

விளக்கம்: 'இப்பொருளை யான் அறியா நின்றேன்' எனச் செப்புவதால் விஷயத்தைத் தோற்றுவிக்கும் ஞானத்திற்கு, தான் இருப்பிடம் என்னுமிடம் தோற்றா நிற்கின்றதன்றோ? இம்முறையில் ஆன்மா ஞானத்திற்கு இருப்பிடம் என்பது தெள்ளிதின் தெரிகின்றமையின், இதை மறுக்க இயலாதெனக் கொள்க.

'நான் இதை அறிகிறேன்' என்னும் வாக்கியத்தில் (நான் என்பது அறிபவரையும்) (இதை என்பது அறியப்படும் பொருளையும்) அறிகிறேன் என்பது அறிவையும் காட்டுவதைத் தெரிந்து, கொள்கிறோம். இம்முறையில் நான் என்னும் ஆன்மாவிற்கும், அறிகின்றேன் என்னும் ஞானத்திற்கும் எத்துணை வேறுபாடுள்ளது! அங்ஙனமாயின், ஆன்மாவும் ஞானமும் ஒன்றே என அனுபவத்திற்கு (வழக்கிற்கு) விரோதமாகச் சொல்வது தகுதியாமா? அவ்வாறாயின், அறியப்படும் பொருளும் அறிவும் ஒன்றே என ஏன் சொல்லுதல் கூடாது.

அவ: அறிவுடையனாயிருக்கை (ஜ்ஞாத்ருத்வம்) முயற்சியுடையனாயிருக்கை (கர்த்ருத்வம்) இன்பந்துய்ப்பவனாயிருக்கை (போக்ருத்வம்) இம்மூன்றியல்புகளும் சீவாத்மாவிற்குண்டு. அங்ஙனமிருக்க, இங்கு அறிவுடையனாயிருக்கை என்னும் இயல்பொன்றை மட்டும் செப்பி, மற்ற இரண்டையும் சொல்லாதொழிவானேன் என்னும் ஐயத்திற்கு விடை பகருகிறார்:

மூலம்: 29. ஜ்ஞாதாவென்றபோதே, கர்த்தா போக்தா என்னுமிடம் சொல்லிற்றாயிற்று,

மூலம்: 30. கர்த்ருத்வ போக்ருத்வங்கள் ஜ்ஞாநாவஸ்தா விசேஷங்களாகையாலே.

இவ்விரு சூத்திரங்களுக்கும் விரிவாகவே பொருள் கூற வேண்டியுள்ளது. ஒருவன் சிறப்புடைய ஒரு பொருளை இன்னது என அறிகிறான். அதை அறியுங்கால் அதனிடம் விருப்பம் உண்டாகிறது. அவ்விருப்பம் அதை அடைய முயலுமாறு அவனைத் தூண்டுகிறது. அம்முயற்சியினால் அதைப் பெற்று இன்பந்துய்க்கிறான். இங்ஙனம் இவற்றுள் ஒன்று நிகழவே மற்றவையும் நிகழ்தல் யாவரும் அறிந்ததே. மேற்கூறிய அறிவு முதலியன ஒன்று பலவா என நோக்கின் ஒன்றேயாகும்.

உதாரணமாக மண், ஒரு நிலையையடையுங்கால், பிண்டமென்றும், மற்றொரு நிலையை அடையுங்கால் குடம என்றும், வேறொரு நிலையை அடையுங்கால் துண்டுகள் என்றும் பெயர் பெறுதல் போல் ஞானமும் ஒரு நிலையை அடையுங்கால் விருப்பம் என்றும், மற்றொரு நிலையை அடையுங்கால் முயற்சி என்றும், வேறொரு நிலையை அடையுங்கால் இன்பந்துய்த்தல் என்றும் பெயர்களைப் பெறுகின்றன. இதை உற்றுநோக்கில், எங்ஙனம் மண்ணில் பிண்டம் முதலியன அடங்கும் பொருள்களோ, அங்ஙனமே ஞானத்திலும் விருப்பம் முதலியன அடங்கும் பொருள்கள் என்பது தெளிவு. ஆதலின், ஒன்றைக் கூறின் அதில் அடங்கியவை கூறாதொழியினும் அவையும் கூறியதாகவே தேறும்.

அவ: இவ்வாறு ஆன்மாவிற்கு இயற்கையாயுள்ள முயற்சியுடையனுயிருக்கும் தன்மையை இல்லை செய்து, இத்தன்மை பிரகிருதிக்கே உள்ளது எனச் சொல்லும் சாங்கியருடைய கொள்கையும், அதன் மறுப்பையும் தெரிவிக்கிருர்:

மூலம்: **31.** சிலர், குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது, ஆத்மாவுக்கு இல்லை என்கிருர்கள்.

மூலம்: **32.** அப்போது இவனுக்கு சாஸ்த்ரவச்யதையும், போக்த்ருத்வமும் குலையும்.

பொருள்: *31.* சாங்கியர் சத்துவம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு ஆகிய முக்குணங்களுக்கே கர்த்துருத்வம் உள்ளது. இத்தன்மை ஆனமாவிற்கில்லையென்கிருர்கள். 32. ஆனமாவிற்கு மேற்கூறிய வனமை இல்லை என்னில், இதை விட வேண்டும, இதைப் பற்ற வேண்டும என்னும சாத்திரத்திறகுக் கட்டுப்பட்டு நடததலும், இவற்றிஞல் ஏற்படும் இன்ப துனபங்களைத் துய்த்தலும் சேராததாகும.

விளக்கம்: 31. மேற்கூறிய முக்குணங்களும், பிரகிருதியும் ஒன்று என்பது சாங்கியருடைய கருத்து. இமமுறையில், குணங்களுக்குக் கர்த்ருத்வம் உண்டு எனனில், பிரகிருதிக்கும் அத்தன்மை உண்டு என்பது சொல்லாமலே விளங்கும். இப்பிரகிருதி தத்துவத்திற்குக் காரியப்பொருள் மகத்தத்துவம். மகத்தததுவத்திற்குக் காரியப்பொருள் அகங்கார தத்துவம். அகங்கார தத்துவம், சாத்துவிகம், இராஜஸம், தாமஸம என மூவகைப்படும். அவற்றுள் சாத்துவிக அகங்காரத்தின் காரியபபொருள் மனம். இமமுறையில் பிரகிருதியின காரியபபொருள் மனமாகிறது. இம்மனமும் பிரகிருதியும், காரியமும் காரணமும ஒன்று என்னும் முறையில் ஒரு பொருளேயாகும. இம்மனமும் சீவனும் சேர்ந்திருக்கும் பொருள்களாகும். எங்ஙனம் மஞ்சள் மலரோடும் சேர்ந்த ஸ்படிகக்கல் மஞ்சள் நிறமுடையதாகவே தோற்றுகிறதோ, அங்ஙனமே கர்ததுருத்வமுடைய மனத்தோடுங்கூடிய புருஷன் கர்ததுருத்வமுடையவனுகவே தோன்றுகிருன். ஸ்படிகக்கல்லிற்கு மஞ்சள நிறம் இயற்கையன்ருதல் போன்றே, ஆன்மாவிற்கும் கர்த்துருத்வம இயறகையன்று எனபது சாக்கியர் கூற்று. இக்கூற்ருல் குணங்கள், பிரகிருதி, மனம் எனபபடும் ஒரு பொருளிற்கே கர்த்துருத்வம் உண்டு எனத் தேறும். (தொடரும்)

---


## பக்தன் ஐந்தாம் ஆண்டு.

பக்திக்கும் பண்பாட்டுக்கும் கால தேசவர்த்தமானத்தை யனுஸரித்து சக்தியானுஸாரம் ஆற்றிவரும் தொண்டில் நாளது சித்திரையில் **பக்தன்** ஐந்தாம் ஆண்டைத் தொடங்குகிருன். ப்ரஸித்த அறிஞர்களின் ஆசியினுலும், விளம்பரதாரர்களின் உதவியினுலும், சந்தா நேயர்களின் பேராதரவினுலும் **பக்தன்** நாளுக்கு நாள் விருத்தியடைந்து வருகிருன்.

இனி பிரதி இதழும் 72 பக்கத்துக்குக் குறையாமல் வெளிவரும். தனிப் பிரதி அணு 6. **வருடச் சந்தா ரூ. நான்கு.** (நன்கொடைச் சந்தா ரூ. 10-ம் அதற்கு மேலும்.) சந்தா நேயர்களுக்கு நமது விசேஷ மலர்கள் எவ்வித அதிகக் கட்டணமுமின்றி அனுப்பப்படும்.

நாளது சித்திரை இதழ் **ஸ்ரீராமஜயந்தி மலராக** வெளிவரும். **அணு 12.** ஸ்ரீஜயந்தி மலர், திருப்பாவை மலர் இரண்டையும் போன்று விசேஷஅம்சங்களுடனும் ஓவிய அணியுடனும் பெருவிருந்தளிக்கும். **ராமநாமமே ஜீவன்.**

# கண்ணீரின் கருணை

குமாரி அச்வினி

★

என் பிதா என்னைத் தற்கால நாகரீகப்படி உயர்ந்த படிப்பு படிக்க வைத்து நாகரீக முறையிலேயே வளர்த்து உத்யோகத்திற்கும் அனுப்பி அழகு பார்க்க மிகமிக ஆசைப்பட்டார். என் பாட்டியும் தாயாரும் என் பிதாவின் ஆசைக்கு ஒரு முள்வேலியைப் போட்டு விட்டதோடு விட்டுப் படிப்பான S. S. L. C. பரீக்ஷை முடிந்ததும் என்னை என் அத்தை மகனுக்கே விவாகத்தையும் செய்துவிட ஏற்பாடு செய்துவிட்டார்கள். என் அத்தைமகன் மகாமேதை, அழகன், கெட்டிக்காரன். அவனை மணக்க நான் பரிபூர்ணமான ஆவலுடன்தான் எதிர்பார்த்தேன். ரங்கராஜன் என்கிற பெயரை ஒருதரம் உச்சரிக்கும்போதே எனக்கு இன்பம் அலைமோதும்.

ரங்காராஜனைப் பார்க்கவும் பேசவும் தாராளமாக நான் பழகவும் உறவுமுறையின் துணைகொண்டு முன்வந்தேன். ஆனால், அதற்கும் என் பாட்டி 144 சட்டம் விதித்து விட்டது என் மென்னியைப் பிடித்ததுபோலாகி விட்டது! ரங்கராஜனைப் பார்க்கவே முடியாத நிலைமைகூட உண்டாகிவிட்டது. அதற்கு ஏற்ருப்போல்ரங்கராஜன் வெகு கெட்டிக்காரனுகைப் படித்துப் பதக்கங்கள் பெற்றதால் சர்க்காரே அவனை மேல்நாட்டுப் படிப்புக்காக அனுப்பி விட்டதானது எனக்கு உலகமே இருண்டுவிட்டமாதிரி இருந்தது.

மேல்நாடு சென்ருல் எத்தகையோரும் (எங்கோ ஒருசிலர் தவிர) முற்றிலும் மாறிப்போய் —ஏன்? ஒரு மனைவியைக்கூட— மனைவியின்முன் குழந்தையைக்கூட— அழைத்துக் கொண்டு இறக்குமதியாவது தற்காலத்தின் கோலமாகி விட்டதே! அதே போலத்தான் அத்தானுக்கும் நடக்கும். அதோடு மிகப்பெரிய படிப்பு, உத்யோகம், உயர்வு இவைகள் ஏறிவிட்டதால் இனி எங்களைக் கட்டாயம் அத்தான் மதிக்கமாட்டான் என்பது ஊர்ஜிதமாகிவிட்டதோடு அத்தையின் போக்கும் அதையொட்டியே தாளம் போட்டு எங்களுக்குள் பிரிவினையைக் காட்டி வளர்த்து விட்டது.

இனிமேல் கேட்கவேண்டுமா? எனக்கு வேறு இடம் தேடிக் கல்யாணம் நிச்சயமாகி முகூர்த்த நாளும் நெருங்கி விட்டது. அத்தானை என்னல் மறக்கவே முடியவில்லை. எங்களுக்குள் கடிதப் போக்குவரத்தும் கிடையாது. இத்தகைய ஆழமான அன்பு வேரூன்றி வளர்ந்திருப்பதும் பிறருக்குத் தெரியாது; எதிர்கால விதி எப்படியிருக்குமோ என்ற பயத்தால் நானும் பேசாமல் இருக்கவேண்டியதாயிற்று. எனினும், அத்தான் இப்படிக் கைவிட்டுவிட்டாரே என்ற ஏக்க இருளுக்கு மத்தியில் அவர் உண்மையில் மறந்திருப்பாரா? என்கிற எண்ணமும் கூடவே தோன்றியது. அத்தையும் தன் மகன் வந்தபிறகு விவாகத்தைச் செய்யலாம் என்ற வார்த்தையை ஒப்புக்குக்கூடச் சொல்லாதது தான் எனக்குத் தாங்க முடியாத வேதனையைக் கொடுத்துவிட்டது.

கல்யாணத்திற்கு முதல்நாள் பூராவும் அழுது அழுது என் கண்கள் சிவந்து வீங்கி விட்டன. அதோடு கல்யாணச் சடங்கின்



183190.

போது மணையில் நான் உட்கார்ந்திருக்கிறேனேயன்றி, கண்ணீர் ஒழுவே இல்லை. அக்கினிப் புகையும் சிறிது சகாயமாக எனக்கு உதவி செய்ததால் நான் ஏதோ இஷ்டப்படாமல் அழுவதாகச் சிலர் நினைத்துப் பேசத்துடங்கினர்களாம். புக்ககத்தினர் சிலர், கள்ளக்காதலன் வேறு யாரேனும் இருக்கிருனே என்னவோ?... என்று குற்றம் குறைகண்டு பேசினர்களாம். அந்த குசமச புகை பலமாகச் சுழலமிட்டுக் கிளம்பியதாம். என்னுடைய அழுகைக்குக் காரணம் எனது ஆருயிர்த் தோழி அமலாவுக்குத்தான் தெரியும். எனக்கு நாத்தனாராகப்போகும் பெண்மணி என் தோழியிடம் சென்று, "இந்தப் பெண் ஏன் இப்படி அழுகிருள்? இந்தப் பிள்ளையை மணக்க இஷ்டமில்லையா? அல்லது வேறு எவனை யாவது வரித்திருக்கிருளா? என்ன ரகஸியமிருப்பினும் என்னிடம் சொல்லிவிடு" என்று கேட்டாளாம்.

எந்தத் தெய்வசக்தியின் பலமோ?........என் ஆருயிர்த் தோழிக்குத் திடீரென்று ஒரு அசுரதைரியமும் ஆவேசமும் உண்டாகியதாம். உடனே, "மாமீ! வீணன அபவாதம் எதுவும் என் ஆருயிர்த் தோழியின்மீது சொல்லவேண்டாம். நான் அவளுடைய உயிர்நேசி என்பதால் பரிந்துபேசுகிறேன். அவளுக்கு நீங்கள் கொடிய களங்கத்தை உண்டாக்கிப் பேசுகிற அநியாயத்தை ஒழிப்பதற்காக உண்மையைச் சொல்லுகிறேன். அவளுக்குக் கண் எப்போதும் சரியில்லை. தொந்தரவு கொடுப்பதால் சதா அழுவதுபோல் கண்ணீர் வழிந்துகொண்டே இருக்கும். இதுதான் விஷயம்" என்று சொல்லிவிட்டாளாம்.

அவ்வளவுதான்!...கண் சரியில்லாத பெண்ணை நாங்கள் கல்யாணம் செய்துகொள்ள மாட்டோம்...என்று ஒரு கிளர்ச்சியை உண்டாக்கிக் கல்யாணத்தையே நிறுத்திவிட்டுப் போய்விட்டனர். என் பிதாவுக்கு ஏகப்பட்ட நஷ்டம் உண்டாகி விட்டது. அதனல் கேட்க முடியாத வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு தவித்தேன். என் மனம் உருகிச்செய்த ப்ரார்த்தனைக்குக் கடவுள் சித்தமிரங்கி என் அத்தானுக்குத் திடீரென்று இந்தியாவில் வேலை கொடுத்து ஏரோப்ளேனில் அனுப்பிவிட்டார்கள். என்னே ஆச்சரியம்! அவர் வந்த பிறகு இந்த விஷயங்களை எல்லாம் கேட்டு அவர் மனம் வெடித்துப்போகும்படித் துயரப்பட்டார். என் பிதாவின் நஷ்டத்தை ஒரு நொடியில் தாம் தீர்த்து வைத்து என் அத்தையும் என் பிதாவுமே வியப்புறும்வண்ணம் என்னை மணந்துகொண்ட ஆச்சரியத்தை என்ன என்று சொல்வது! எனக்குக் கண் ஒன்றுமில்லாதிருக்கையில் கண்ணுக்கு ஒரு ஊனத்தைக் கற்பித்துச் சொல்லி விவாகத்தை நிறுததிவிட்ட நேசியை என் பெற்ருேர் பகையாளிபோல் பகைத்துக்கொண்டார்கள். ஆனல் அவள் சொல்லிய வார்த்தையே—என் கண்ணீரே—எனக்குக் கருணையைக் காட்டியது என்ருல் மிகையாகாது! இப்போது நானும் என் அத்தானும் தேனும் பாலும்போல் இருக்கிருேம்.

"அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"—திருக்குறள்.

# காவிதாசர் கனவு

## 8. உமா ப்ரஸாதம்—குமார ஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

ஒருநாள் நாரத ரிஷி வந்திருந்தபொழுது அவர் ஹிமவானைப் பார்த்து "இவள் பரமேச்வரனுக்குப் பத்தினியாகப் போகிறாள். அவர் இவளுடன் அர்த்தநாரீச்வர மூர்த்தமாக விளங்கி எல்லா உலகங்களுக்கும் அருள்புரிவர்" என்று கூறினார். சிறிது காலத்திற்குப்பின் பரமேச்வரர் இமயமலைச் சாரலிலேயே தவஞ்செய்யத் தங்கினார். அப்பொழுது ஹிமவான் பார்வதியை அவளுடைய தோழிகளுடன் பரமேச்வரனுக்குப் பணிவிடை செய்ய நியமித்தார். அவளும் நித்திய பூஜைக்கு வேண்டிய மலர்களைக்கொண்டுவந்து அர்ப்பணித்து பரமேச்வரன் இருக்கும் இடத்தை அலகிட்டுக் கோலங்களால் அலங்கரித்துப் பரமேச்வரனுக்குப் பணிவிடை செய்தாள். அவருடைய சடையில் விளங்கிய சந்திரனுடைய குளிர்ந்த கிரணங்களால் களைப்பு நீங்கி எப்பொழுதும் பக்தியுடனும் வணக்கத்துடனும் அவரை ஆராதனம் செய்துவந்தாள்.

"அவசித பலிபுஷ்பா வேதிஸம்மார்க்கதக்ஷா |
நியமவிதி ஜலானாம் பர்ஹிஷாம் சோபநேத்ரீ ||
கிரிசமுபசசார ப்ரத்யஹம் ஸா ஸுகேசீ |
நியமிதபரிகேதா தச்சிரச்சந்த்ரபாதை: ||

### தேவர்களுடைய வேண்டுகோள்.

இது இப்படி இருக்கத் தேவர்கள் எல்லோரும் தாரகாசுரனால் துன்பப்படுத்தப்பட்டு வருந்தி தேவேந்திரனை முன்னிட்டுப் பிரம்மலோகம் சென்று அவரைப் பின்வருமாறு துதித்தார்கள்:

"மும்மூர்த்தி ஸ்வரூபமாக விளங்குபவரே! நீர் சிருஷ்டிக்கு முன் சச்சிதானந்த ஸ்வரூபமான பரமாத்மாவாக இருந்தீர். சிருஷ்டிக்குப்பின் மும்மூர்த்தியாக இருக்கின்றீர். அனேக கோடிப் பிரம்மாண்டங்களுக்கு நீரே கர்த்தாவாக இருக்கின்றீர். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களை நடத்தும் முப்பொருளும் நீங்கள்தான். பரமாத்மாவாகவும் பராசக்தியாகவும் இருக்கின்றீர். நீங்கள் கண் திறப்பதே உலக சிருஷ்டி, நீங்கள் கண்மூடுவதே மகாப்ரளயம். உலகத்திற்குப் பிறப்பிடமாகவும் உண்மையில் பிறப்பற்றவராகவும் இருக்கின்றீர். உலகத்திற்குப் பிரபுவாகவும் உங்களுக்கு மேலான பிரபு அற்றவராகவும் இருக்கின்றீர். உங்களை உங்களால்தான் அறியமுடியும். உங்களுக்கு அணிமாதி அஷ்ட சித்திகளும் சர்வ சக்திகளும் உள. நீங்கள் வேதங்களுக் கெல்லாம் முதற் காரணம். உங்களைத்தான் பிரகிருதியாகவும் புருஷனாகவும் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

"நமஸ்த்ரிமூர்த்தயேதுப்யம் ப்ராக்ஸ்ருஷ்டே: கேவலாத்மனே |
குணத்ரய விபாகாய பச்சாத்பேதமுபேயுஷே ||
த்வாமாமனந்திப்ரக்ருதிம் புருஷார்த்தப்ரவர்த்தினீம் |
தத்தர்சினமுதாஸீனம் த்வாமேவபுருஷம்விது: ||",

அவர் அருளுடன் அவர்களுடைய வரவின் காரணத்தை வினவ அவர்களுக்காக பிருகஸ்பதி தாரகாசுரனால் தேவர்களுக் கேற்பட்ட கஷ்டங்களைக் கூறினார், "ஒரு சேனாதிபதியை எங்களுக்குத் தந்தருளவேண்டும்" என்று வேண்டினார். அப் பொழுது பிரம்மதேவர் கூறினார்: "வெகு விரைவில் உங்களுடைய கோரிக்கை நிறைவேறும். அவனுக்கு வரம் கொடுத்து, நானே அவனைக் கொல்வது சரியல்ல. நாம் வளர்த்த மரம் நச்சு மரமாக ஏற்பட்டாலும் நாமே அதை வெட்டலாமா? பரமேச்வர னுடைய சக்தியால்தான் அவனைக் கொல்லமுடியும். நீங்கள் பார்வதிதேவியின் அருளை அடைந்துபரமசிவனுடைய தவத்தைக் கலைத்து பார்வதி பரமேச்வரர்களுடைய திருமணத் திருவிழாவை நடத்திவைத்து அவர்களுடைய திருமகனாகிய குமாரக் கடவுளால் தாரகாசுரனைச் சங்காரஞ் செய்யுங்கள்" என்று மொழிந்து மறைந்தார். பிறகு தேவர்களும் சுவர்க்கம் சென் றார்கள்.

## காமதகனம்.

பிறகு தேவர்களுக்கெல்லாம் அரசனான தேவேந்திரன் மன்ம தனை நினைத்தான். உடனே மன்மதன் தோன்றினான். தேவேந் திரனிடத்தில் தான் என்ன செய்யமுடியும் என்று கூறினான்:

"உங்களுக்கு உலகங்களில் எந்தக் கார்யம் நடைபெற வேண்டியிருந்தாலும் நான் அதை நிறைவேற்றுவேன்" உங்களுடைய பதவியை விரும்பி யாராவது தவஞ்செய்கிறார் களா? அவனை நான் வில்லுக்கும் அம்புகளுக்கும் கீழ்ப்படியச் செய்வேன். முக்தியை விரும்பித் தவஞ் செய்பவர்களை அழகிய பெண்களுடைய கடைக்கண் பார்வைகளுக்கு அடிமையாக்கி விடுவேன். எவருடைய அறத்தையும் பொரு ளையும் வெள்ளம் நிறைந்த ஆறு கரைகளை உடைப்பது போல அழிக்க முடியும்! எந்த சுந்தரியையாவது நீர் விரும்பி னால் அவளே உங்களை வலுவில் வந்து விரும்பும்படிச் செய் வேன். தேவ தேவா! உங்களுடைய வஜ்ராயுதம் சில நாட்கள் இளைப்பாறட்டும். என் மலரம்புகளால் உங்களுடைய எதிரியான அசுரர்களை வீர்யமற்றவர்களாகவும் பெண்களின் அடிமைகளாகவும் செய்யமுடியும். இதுமட்டுமல்ல. என் னுடைய ஆயுதம் மெல்லிய மலர்களாக இருந்தாலும் வஸந் தனைத் தோழனாகக்கொண்டு பினாகம் என்ற வில்லேந்திய ஒப்பற்ற வில்லாளியான பரமேச்வரனைக்கூடத் தோல்வியடை யச் செய்வேன்."

"கஸ்யார்த்ததர்மௌவதபீடயாமி ஸிந்தோஸ்தடாவோகஇவப்ராவ்ருத்த:"
"தவப்ரஸாதாத்குஸுமாயுதோபி ஸஹாயமேகம்மதுமேவலப்த்வா | "
குர்யாம்ஹரஸ்யாபிபினாகபாணேர்தைர்யச்யுதிம்கேமமதன்விநோன்யே ||"

இதைக் கேட்ட தேவேந்திரன் மனமகிழ்ச்சியடைந்து விடை யளித்தான்:

"மன்மதா! நீ கூறுவது உண்மை. எனக்கு ஒப்பற்ற இரண்டு ஆயுதங்கள் நீயும் வஜ்ராயுதமுந்தான். ஆனால், வஜ்ரம் தவம் நிறைந்த முனிவர்களிடத்தில் பயன்படாது.

ஆனால், நீயோ எந்த இடத்திலும் யாவரிடத்திலும் வெற்றி அடையும் ஆற்றலுள்ளவன். பரமேச்வரனுடைய தவத்தைக் கூடக் கலைக்க உன்னால் முடியும் என்று கூறினாய் அல்லவா? அந்த அரிய பணியைத்தான் நீ செய்யவேணும். பரமேச்வரனுக்குப் பார்வதியிடத்தில் அளவற்ற அன்பு உண்டாகும்படி நீ செய்யவேண்டும். பிறர் செய்யக்கூடாத சாதாரண கார்யம் கூட புகழையளிக்கும். இதுவே பிறர் செய்யக்கூடாத மிக உயர்ந்த அசாதாரணமான கார்யம். இந்த வெற்றியும் புகழும் உன்னுடையவை.''

''அப்யப்ரசித்தம் யசஸேஹிபும்ஸா மனன்யசாதாரணமேவகர்ம.''

(தொடரும்)

---

குட்டிக் கதை

''விருச்சிகம்''

## நம்புவீர்களா?

எங்க அத்தையின் பெண்ணுக்குக் கல்யாணம் என்ற கடிதத்தைப் பார்த்த உடனே எனக்கு வந்த அழுகையும் ஆத்திரமும், ஏமாற்றமும் கூறத்தரமில்லை. சிறிய குழந்தைபோல் விக்கிவிக்கி அழுதுவிட்டேன். எங்கப்பாவும் எங்க அத்தைக்குச் சரியான பணக்காரராயிருந்திருந்தால் எனக்கு எங்க அத்தை தன் பெண்ணைக் கொடுக்காமல் வேறு இடம் தேடிச் செல்வாளா? நாங்கள் ஏழை என்பதனாலேதானே இந்தக் கதியை அடைய நேர்ந்தது........என்ற துக்கம் தாளவில்லை. இனி, இந்திராவை மணக்காமல் உயிருடன் இருக்கவே கூடாது. தற்கொலைதான் செய்துகொண்டு சாகவேண்டும்......என்றும் முடிவு செய்துவிட்டேன். ஆனால், என்னுடைய இந்தச் செய்கையால் என் அருமை இந்திராவின் கல்யாணமே நின்றுவிடப்போகிறதே என்ற எண்ணத்தினால் கல்யாணமாகியபிறகு இந்த உயிரைவிட்டு விடுகிறதே சரி என்று முடிவு கட்டினேன். கல்யாணத்திற்கு வர வேண்டுமென்று என் தாயாரும் தகப்பனாரும் வற்புறுத்தினார்கள்.

சுமார் 5, 6 வருஷங்களாக எங்க அத்தை குடும்பத்துடன் ஸிலோனிலேயே இருந்துவிட்டதால் இந்திராவை நான் பார்க்கவே இல்லை. கல்யாண காலத்திலாவது பார்க்கலாம் என்று நான் விரும்பிக் கல்யாணத்திற்குச் சென்றேன். என்னைப்போலத்தான் இந்திராவும் எங்கள் சிறிய வயது சினேகத்தினால் துடிதுடித்து வருந்துவாள் என்று எண்ணினேன். ஆனால், நான் அடைந்த ஏமாற்றமோ சொல்லி முடியாது.

இந்திரா எங்கிருப்பாள் என்றும் அவளைப் பார்க்கவேண்டும் என்றும் துடிதுடித்துத் தவித்து ரகஸியமாகப் பார்த்ததுதான் தாமதம்...ஒருமுழ உயரம் என்னைத் தூக்கிவாரிப்போட்டது! சுமார் அவளுடைய எடை 200க்கு மேலிருக்குமேயன்றிக் குறையாது! அங்கு தூர இருந்த சிறுமிகள் கல்யாணப் பெண் டன்லப் டயர்!... கல்யாணப்பிள்ளை மிச்சிலின் டயர்!......என்று பரிகஸித்துக் கை தட்டிப் பேசுவதைக் கேட்டதும் என் துக்கமெல்லாம் பறந்துபோய், அது மட்டும் எங்கப்பா ஏழையாகவே இருந்தது என் பாக்யம் என்று ஒரு குதிகுதித்தேன். இதை நீங்கள் நம்புவீர்களா?...

# மேனாட்டுத் தத்துவம்

## இரண்டாம் பாகம்

## பிளேட்டோ (Plato) [428-7 கி.மு.—348-7. கி. மு.]

ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

காலப் பனி மூட்டத்தில் அநேக உருவங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுகின்றன; நீண்ட மாபெரும் காலக்கூடத்தில் அநேக ஒலிகள் தேய்ந்துமாய்ந்துவிடுகின்றன. ஆனால் சில சான்றோர்களின் வானளாவிய உருவங்களும், அவர்கள் சாற்றிய தெய்வப் பொன் மொழிகளும் காலங்கடந்து நம் சிந்தை அரங்கில் இன்றும் எழக் காண்கின்றோம். இத்தகைய சான்றோர்களில் பிளேட்டோவும் ஒருவர் என்று ஐயமின்றிச் சாற்றலாம்.

ஒரு சான்றோனின் இலக்கணம் வகுக்குமிடத்து ஒரு பெரியார் கூறிய சொற்கள் இங்குச் சிந்திக்கத் தகுந்தவை. 'ஒரு சான்றோனிடத்தில் பல மேதாவிகளின் தனிப்பட்ட அம்சங்கள் ஒருங்கே கூடித் திகழக் காண்கின்றோம். பல மேதாவிகள் திரண்டு ஓர் உருவமாய்ச் சமைகின்ற உத்தமனே சான்றோன் எனப்படுவான்.

இத்தகைய இலக்கணம் பிளேட்டோவுக்குச் சாலப் பொருந்தும். கவியுள்ளம் படைத்தவரேனும், கவிகளைத் தம் குடியரசிலிருந்து விலக்கிவிட்டார். செறிந்த கற்பனை ஒருபால்; ஆழ்ந்த சிந்தனை ஒருபால்; சிந்தனைக் கட்டடத்தை எழுப்புகின்ற ஆற்றல் ஒருபால்; அதை அழிக்கின்ற திண்மை ஒருபால்; எல்லாவற்றையுஞ் சேர்த்துப்பார்க்கின்ற ஒரு படைப்புணர்ச்சி ஒருபால்; எல்லாவற்றையும் பிரித்துப் பிரித்துச் சலித்துச் சலித்து நோக்குகின்ற நுண்ணறிவு ஒருபால்; பௌதிக சாத்திரத்தை ஆராய்கின்ற இயல்பு ஒருபால்; பரத்தின் அளப்பரும் சோபையில் திளைக்கும் ஆர்வம் ஒருபால்;—எல்லாம் பிளேட்டோவின் மனக்கோயிலில் காட்சி அளிக்கின்றன.

பிளேட்டோவைப்பற்றி ஒரு கனவுச் சித்திரம் எழுந்திருக்கக் காண்கின்றோம். பிளேட்டோவைச் சாக்ரடீஸ் சந்திப்பதற்கு முதல் நாள் இரவு அவர் ஓர் இன்பக்கனவு காண்கின்றார். ஓர் அன்னக்குஞ்சு தம் காலடியில் கிடக்கின்றது. அதற்குச் சட்டென சிறகு முளைத்து அது விண்ணில் பறந்து செல்லுகின்றது. பறந்து செல்லுகின்றபொழுதே அது ஒரு தெய்வ இசை மழையைப் பெய்துகொண்டே போகின்றது.

இந்தக் கனவின் மர்மத்தை ஜேம்ஸ் ஆடம் தம்முடைய 'கிரேக்க நாட்டின் சமய ஆசிரியர்கள்' என்ற நூலில் ஆராய்கின்றார். முதல்முதலில் சாக்ரடீஸின் பொன்னடி நிழலில் தங்கியிருந்த பிளேட்டோ அவரையும் கடந்து தம் ஆசிரியர் காணாத சமயம் கவிதை முதலிய சிகரங்களை அடைந்தார் என்றதுதான் இக்கனவுக்குப் பொருள் என்று இந்நூலாசிரியர் மொழிவது இங்கு நோக்கத்தகுந்தது. சாக்ரடீஸ் பௌதிக சாத்திரங்களைப்

புறக்கணித்தார். பிளேட்டோவோ அவைகளின் நுணுக்கங்களைத் துருவி ஆராய்கின்றார். பிளேட்டோவின் அறிவு வட்டம் சாக்ரடீஸின் அறிவு வட்டத்தைக் காட்டிலும் மிகவும் விரிந்ததென்றே சொல்லவேண்டும். தம் காலத்தில் விரிந்து கிடந்த பலதுறைக் கல்விக்கடலில் நீந்தினார் பிளேட்டோ. தம் காலத்திற்கு முன்பு மலர்ந்த கல்வி கேள்விகளையும் அவர் சிந்தை நாடிற்று. தம்முடைய பழுத்த அனுபவத்தைக் கவிதை நயம் ததும்பும் செஞ்சொற்களில் உலகம் இன்புற்றுப் பருகுமாறு அவர் வெளியிடுகின்றார். இத்தகைய சான்றோனின் வாழ்க்கை வரலாறுகளைப் பார்ப்போம்.

அவருடைய தெய்வப் பிறவியைப்பற்றி அவருடைய உறவினர் உரைக்கின்றனர்: பிளேட்டோவோ தெய்வ அப்பாலோவின் மகன் என்ற சரித்திரத்தை நெய்துவிட்டனர். அவர்பால் வைத்த அபிமானத்தால் இக் கதை எழுந்தது என்பதில் யாதொரு ஐயமுமில்லை. ஏதன்ஸ் நகரத்திற்கு அண்மையிலுள்ள ஏஜினா (Aegina) என்ற தீவில் கி. மு. 427 நூற்றாண்டில் இளவேனிற் காலத்தில் அரிஸ்டன் (Ariston) என்றவருக்கும் பெரிக்டியானி (Perictione) என்ற மாது சிரோமணிக்கும் பிறந்தவர் இவர். ஏதன்ஸ் நகரத்து கடைசி வேந்தனை கோட்ரஸ் (Codrus) வம்ச பரம்பரையில் தாம் தோன்றினதாக அரிஸ்டன் சொல்லிக் கொள்வார். பிளேட்டோவின் தாயும் பிரபுக்கள் வம்சத்தில் தோன்றியவள். பிளேட்டோ தம்முடைய வம்சத்தின் சிறப்பை மிக கௌரவத்துடனும், பரிவுடனும் சொல்லத் தயங்குகிறதில்லை; தம்முடைய உடன்பிறந்தோர்களுக்கும், தம் தாய் வழி மாமனுக்கும் தாயின் ஒன்றுவிட்டுச் சகோதர முறையில் நிற்பவனுக்கும் தம்முடைய அழியாச் சம்பாஷணைகளில் தக்க இடங்கள் அளித்துச் சிறப்பித்த செய்தியை நாம் நன்கறிவோம். அவர்களுக்குத் தம் நூல்கள் வாயிலாகப் பிளேட்டோ சிலைகள் எழுப்பியிருக்கிறார் என்று சொன்னால் அது மிகை ஆகாது.

பெரும் குடும்பத் தொட்டிலில் தாலாட்டப்பட்ட இவருக்கு வம்சச் செருக்கு இல்லாமற்போகுமோ? அதன் சாயம் இவர் நூலின்மீது படாமற் போகாது என்ற உண்மையையும் நாம் மறக்கக்கூடாது. கிரிட்டியஸ் (Critias) கார்மிடீஸ் (Charmides) இவ்விருவரும் சாக்கரடீஸ்ஸின் சத்சங்கத்தை நாடினர்கள்; கிரிட்டியஸ் ஸோ பிளேட்டோவின் தாய்க்கு ஒருமுறையில் சகோதரனாக வேண்டும். கார்மிடீஸ் பிளேட்டோவின் மாமனுவான். இவர்கள் மூலம் சாக்ரடீஸ்ஸின சேர்க்கை பிளேட்டோவுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். முதல்முதலில் பிளேட்டோ சாக்ரடீஸ்ஸைக் காணும் பொழுது அவருக்கு வயது இருபது. சொல்வன்மையால் ஆளை மயக்கவைக்கும் சாக்ரடீஸ்ஸின் மந்தர சக்தியைக் கிளரொளி இளமையிலே அவர் உணரும்படி நேர்ந்தது அவர் புரிந்த பெரும் பாக்கியமே ஆகும். சாக்ரடீஸ்ஸைச் சந்திப்பதற்கு முன்பே டிரேகன் (Dracon) என்றவரிடத்தில் இவர் சங்கீதங் கற்றுக் கொண்டதாகத் தெரிகின்றது; டேமன் (Damon) என்பவரிடம் இந்த டிரே

கன் இசை பயின்றிருப்பதாக நாம் அறிகின்றோம். இந்த டேமன் அறிவுக் களஞ்சியன், பெரிகளீஸ்ஸுக்கு நெருங்கிய நண்பன்.

பிளேட்டோ தம் காலத்தை ஓவியக் கலையிலும், கவிதை உலகத்திலும் கழித்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. பிறகு இவைகளை உதறித்தள்ளிவிட்டதாகச் சரித்திரம் கூறுகின்றது. இவைகளின் சக்திகளைத் தம் தத்துவ விசாரத்திற்கும் பயன் படுத்திக்கொண்டார் என்று சொல்வதே பொருத்தமாகும். இவர் ஒரு சோக நாடகம் எழுதினதாகவும், அதைத் தீய்க்கு இரையாக்கி விட்டதாகவும் ஒரு கர்ணபரம்பரைச் செய்தி நமக்குக் கிடைக் கின்றது. இந்நாடகம் தீய்க்கிரையானால்தான் என்ன? இதைப் படைத்த கவிதை உள்ளம் இவரைவிட்டு அகன்றதா? நாடகப் பண்புதான் இவரைவிட்டுப் போகுமா? அந்தச் சாம்பரிலிருந்து ஒரு புதிய சக்திபிறந்து பிளேட்டோ எழுதின சம்பாஷணைகளில் பாயக்காண்கின்றோம். ஓவியச் சிறப்பும, கவிதை நயனும், பாத்திரங்களைப் படைக்கின்ற நாடகக்கலை ஆற்றலும் இவருடைய தத்துவ ஆராய்ச்சிக்குப் பணிசெய்கின்றன.

பிளேட்டோ தம் பாலியத்தை வெறும் கலைகளிலும் தத்துவ விசாரங்களில் மட்டும் கழித்துவிடவில்லை. குதிரைப்படையில் தம் சில நாட்களை இவர் கழித்திருக்கவேண்டும். சாதாரண காலங் களிலும் ஒவ்வொரு அத்தினியனும் போர்க்கலை பயின்று ஓரளவு காவல் தொழிலாயினும் செய்யக் கடமைப்பட்டவன். ஏதன்ஸோ பிளேட்டோ காலத்தில் இஸ்பார்ட்டாவோடு போரில் இறங்கி விட்டது. எல்லாச் சக்திகளையும் ஏதன்ஸ் திரட்டத் தொடங்கிய காலம் அது. பிளேட்டோவும் போர்கோலம் பூண்டதில்வியப்பில்லை.

போரின் ஆரவாரம் நிரம்பிய இந்நிலையில் பிளேட்டோ பாலி யத்திலேயே எழுத்தோவியத் தொழிலில் இறங்கியிருக்கமுடியாது, மேலும், பிளேட்டோ சம்பாஷணைகளின் மூலந்தான் தம்கருத்துக் களை வெளியிடுகின்றார். அநேகமாய்ச் சாக்ரடீஸ்வராத சம்பாஷணை கிடையாது. பார்க்கப்போனால் சாக்ரடீஸ்தான் இவைகளில் முக்கிய புருஷனாய்க் காட்சி அளிக்கின்றார். அவரைச் சுற்றியே தான் எல்லாம் நிகழ்கின்றன. அவர்தான் ஓர் ஆதார சுருதி மாய்த் திகழ்கின்றனர். மற்ற நாதங்களெல்லாம் இந்தச் சுருதி யைத்தான் தொட்டுக்கொண்டே போகின்றன; இத்தகைய புகழ் மாலையை இலக்கிய உலகத்தில் ஒருவருக்கும் சூடினதாகத் தெரிய வில்லை. சடையப்ப வள்ளலுக்கு அளித்த புகழ்மாலை இதற்கு ஈடாகலாம். இறந்துபோன—அதுவும் மிக்க சோகம் தரக்கூடிய சம்பவத்தில் இறந்துபோன—கருங்கல்லையும் கனிவிக்கும் நிலையில் இறந்துபோன—சாக்ரடீஸ்ஸின் ஞாபகச் சின்னங்கள்தாமோ என்று சொல்லும்படியாய்ப் பிளேட்டோ சம்பாஷணைகள் காட்சி அளிக்கின்றன. சம்பாஷணைகள் யாவும் சாக்ரடீஸ்ஸுக்கும் பிளேட்டோ அளித்த சரம சுலோகங்கள் என்று சொல்லிவிடலாம். எனவே சாக்ரடீஸ் இறந்த பிறகே பிளேட்டோ தம் சம்பாஷணை களை எழுதத் தொடங்கியிருக்கவேண்டும் என்று காம்பர்ஸ் (Gomperz) கருதுகின்றார்.

(தொடரும்)

துப்பறியும் வீர சிங்கப்

# ராஜாராம் நாயுடு

வை. மு. கோ. 112-வது நாவல்

## 7. சிக்கலும் சிரிப்பும்.

மனத்தாங்கலுடன் வந்துள்ள பூபதிக்குத் தன் மகள் பவானி அதிர்ச்சியால் மூர்ச்சைபோட்டுவிட்டதைக் கண்டதும் அவருக்கே மயக்கம் வந்து விழுந்துவிடுவார்போலாகி விட்டது. அதே சமயம் மீரா எதனாலோ அதிகமாய் அழுதது. பூபதி மூர்ச்சித்துள்ள தன் மகளைப் பார்ப்பாரா? இந்தக் குழந்தை அழுவதைப் பார்ப்பாரா? ஒன்றும் தோன்ருமல் தவித்தபடியே குளிர்ந்த ஜலத்தை பவானியின் முகத்தில் தெளித்து விசிறி ஆச்வாசப்படுத்தினர்; அவள் கண் திறக்கும் வரையில் அவர் குழந்தையைக் கவனிக்கவே இல்லை.

பவானி சற்று தெளிவு பெற்றதும் கண் திறந்து அயோமயமான நிலையில் உலகத்தை ஏன் பார்க்கிறோம் என்கிறதுக்கத்துடன் பார்த்தாள். "என்னம்மா, இப்படி திடீரென்று மயக்கமாகிவிட்டாய்? உனக்கு இம்மாதிரி எல்லாம் வந்ததே கிடையாதே. இப்படி எத்தனை நாளாய் வருகிறது" என்று கேட்கும்போது மீரா அதிகமாய் அழுது அழுது கேவிக்கொண்டே போயிற்று. அதைக் கண்ட பூபதிக்கு எரிச்சலும் அதனிடம் ஒரு வெறுப்பும் உண்டாகியதால் ஆத்திரத்துடன்; "சனியன் பிடித்த மூதேவி! அழுதுஅழுது ப்ராணனை வாங்குகிறது பீடை!" என்று கூறியவாறு அதன் முதுகில் இரண்டு அடி கொடுத்துத் தூக்கித்தடாரென்று உட்கார வைத்தார்.

இதைப் பார்த்த பவானிக்கு எங்குமில்லாத ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்துவிட்ட வேகத்தில் தடதடவென்று சென்று மீராவைத் தூக்கி அணைத்துக்கொண்டபடியே, "அப்பா இதென்ன ஆத்திரம்! இதென்ன செய்கை. உலகமறியாத பச்சைப்பாலகியை ஏனப்பா அடித்துத் தூக்கிப் போடுகிறீர்கள்? அதன் பலவீன அழுகையில் அதன் உயிரும் போய்விட்டால் மருமகப்பிள்ளையுடன் நீங்களும் சேர்ந்து கொலைகாரனுகி கம்பி எண்ணிவிட வழி செய்கிறீர்களா?"....என்று பதட்டத்துடன் கேட்டுவிட்டாள்.

குழந்தையைத் தோளில் சாத்திக்கொண்டபடியே முதுகைப் பார்த்தாள். விரல் விரலாகப் பதிந்து எழும்பிச் சிவந்திருப்பதைக் கண்டதும் பவானிக்குப் பின்னும் அழுகையும் ஆத்திரமும் வந்துவிட்டது. சிறிது நேரம் தகப்பனாரிடம் பேசவும் தோன்றவில்லை. குழந்தைக்கு ஏதோ தின்பண்டங்களைக் கொடுத்துச் சமாதானம் செய்த பிறகுதான் தகப்பனாரிடம் பேச வந்தாள்.

பூபதிக்குள்ள ஆத்திரத்தில் பெண்மீது கோபமாகவே இருந்ததேயன்றி, குழந்தையின்மீது அன்பு தோன்றவில்லை. கரகரத்த குரலுடன், "பவானி! இந்தச் சனியனிடம் உனக்கேன் இத்தனை பற்றுதல்? உன் கதி எப்படி இருக்கப்போகிறதோ? உன் விதி உன்னைப் பார்த்துச் சிரித்து வெறிக்கிற சமயம் என்னென்ன பூகம்பங்கள் தோன்றுமோ! எப்படி எல்லாம் விதியமையுமோ தெரியாது! இந்த நிலைமையில் உன்னுடைய நிலையைக் கவனிக்காமல் இந்தச் சனியன்மேல் எதற்காகப் பாசத்தைவைத்து நாசமாக வேண்டும்? பிறந்த உடனே தாயாரை விழுங்கி விட்டது போதாமல் அப்பனின் கதியும் இப்படியாகி விட்டது. இனி, இது உயிருடன் இருக்கப்போகிறதோ! சாகப்போகிறதோ! யார் கண்டார்கள்! இந்தத் தரித்திரம் கிடக்கட்டும்!....இப்போது அந்த மனிதனை எங்குத்தேடுவது? மூன்று நாட்களாகவா வீட்டிற்கே வரவில்லை? ஆமாம்; பவானி! இந்த ரகஸியம் உனக்கெப்படித் தெரிந்தது?" என்றார்.

"அப்பா! எது எப்படியானாலும் சரி, இந்தப் பச்சைச் சிசுவை நீங்கள் எதுவும் சொல்லவேண்டாம்; அதன் தலைவிதியைப்பற்றியாகட்டும், என் விதியைப்பற்றியாகட்டும். மனிதர்களால் இனி எதுவும் செய்துவிடமுடியாது. அன்று எழுதியவன் அழித்து எழுதப்போவதில்லை...அவர் மூன்று நாட்களாக வீட்டிற்கே வரவில்லை. அதற்கு முன்பும் ஒரு வேளை வந்தால் ஒரு வேளை வருவதில்லை. காரணம் பகவானுக்குத்தான் தெரியும்..................இந்த ரகஸியம் எனக்குத் தெரிந்த விதத்தைச் சொல்கிறேன்—ஏன், காட்டுகிறேன்—வாருங்கள்"என்றுகூறி அவரையழைத்துச் சென்று ரகஸியமாய்த் தான் பார்த்த சகலத்தையும் காட்டினாள்.

இதைக் கண்ட பூபதி அப்படியே அதிர்ச்சியினால் நடுநடுங்கிப்போய் தம்பித்து விட்டார். அந்தப் பெட்டியை இப்படியும் அப்படியும் திருப்பித்திருப்பி இன்னும் என்னமாவது கிடைக்குமோ என்று பார்த்தார். பெட்டி

யின்மேல் மூடியில் கண்ணாடிமட்டும் பதித்திருந்ததால் எதுவும் கிடைக்கவில்லை. "பவானி! எனக்கு இப்போது உலகமே தட்டாமாலை சுற்றுவதுபோலிருக்கிறது. 'கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல்' இந்த விபரீதத்தைப் பார்த்தால் ஆள் இரண்டு கொலைகளுக்குத் துணிந்தவன் போலல்லவா தெரிகிறது. இப்போது நான் வந்த விஷயம் சமீபத்தில் நடைபெற்ற பயங்கரமாகும். இதில் காணுவதைப் பார்த்தால் பல மாதங்களுக்கு முன்பு நடந்திருப்பதாகத் தெரிகிறது. இதென்ன மர்மத்திலும் மர்மமாகவன்றோ இருக்கிறது! இந்த பயங்கர விஷயத்தை நாம் எப்படி யார் மூலம் அறிவது? முதலில் ஆளேயே காணவில்லையே! அவனுக்கென்று ஏதாவது டயரி, பெட்டி, பீரோ ஏதாவதிருக்கிறதா? அவைகளைச் சோதனை செய்து பார்த்தால் இன்னும் ஏதாவதுதகவல் கிடைக்குமா?" என்று கலங்கியவாறு கேட்டார்.

பவானியும் குழந்தையைத் தோளில் சாத்தியவண்ணம் "அப்பா! இப்போதுள்ள என்னுடைய நிலைமையைப் பார்த்தால் நல்ல பிறவியானால் உடனே இதயம் வெடித்து உயிர்போய்விடலாம். ஆனால், நான் மகாபாவத்தைச் செய்த கட்டையாகையினால் சாகாமல் பயித்தியம் பிடித்துத் திண்டாடுவேனோ? என்றுதான் தோன்றுகிறது. அவரைப் பற்றிய எத்தகைய தகவலையும் தெரிந்துகொள்ளாமல் 'பணம் பணம்' என்ற பேராசையின் மோகத்தால் படுகுழியில் வீழ்ந்தாகிவிட்டது. இனி, எத்தனைதான் குற்றங்கள் புதை பாணம்போல் கிளம்பினாலும் அதனால் அவர் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் மரணதண்டனையை விலக்கி அவரைக் காப்பாற்றும் கடமையைச் செய்ய நாம் முயல வேண்டுமேயன்றி, அவரைக் காட்டிக்கொடுத்துவிட்டு உங்கள் பெண்ணைக் கைம்பெண்ணாகக் கண்டு கதறும்படிச் செய்துவிடக் கூடாதப்பா! தலைக்குமேல் செல்லும் வெள்ளம் சாண் சென்றால் என்ன! முழம் சென்றால் என்ன! கடைசி வரையில் மனிதனின் உயிருக்கு உலைவைக்காமல் பார்த்துக்கொள்ளும் வழியைத் தேடுங்களப்பா! என்னால் பொறுக்க முடியாத அவமானமும் துக்கமும் உங்களுக்கு உண்டாகிவிட்டது. உங்கள் மானம் மரியாதை சகலமும் பறந்துவிட்டது! இனி என்ன செய்வது? வழியே தெரியவில்லையே!" என்று பெரிதாகக் கதறிவிட்டாள்.

அதே ரூமில் முருகப்பா என்ற பெயர் வரைந்த இரும்புப் பீரோ ஒன்று இருப்பதைக்கண்ட பூபதி, "பவானி! இந்த பீரோவின் சாவி யாரிடம் இருக்கிறது?" என்றார்.

பவா:—அதன் சாவியை அவர் யாரிடமும் கொடுக்கவே மாட்டார். அவருடைய இடுப்பில் அரைஞாண் கயிற்றில்

தானிருக்கும். எங்கள் எதிரில்கூட அந்தப் பீரோவைத் திறப்பதில்லை. அதில் என்ன ரகஸியம் இருக்குமோ? ஆண்டவனுக்கே வெளிச்சம்! ஒருதினம் நான் தற்செயலாக உள்ளே கதவை முண்டித்தள்ளிகொண்டு வந்துவிட்டேன். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "உன்னை யார் இங்குவரச்சொல்லியது?" என்று கடுமையாக அதட்டித் திட்டியவாறு என்னை வெளியேதள்ளிக் கதவைத் தாளிட்டு விட்டார்.

"அப்பா! அன்று அச்செய்கையே எனக்கு ஏதோ மாதிரி இருந்தது. என்னல் நம்பவே முடியாத சந்தேகங்கள் உண்டாகி மனத்தை வாட்டியது. உலகத்தில் பெத்த தாயாருக்கும் கொண்ட மனைவிக்கும்கூடத் தெரியாத ரகஸியம் ஒரு மனிதனுக்கு உண்டா?.............என்று நான் குழம்பினேன். அதைப்பற்றி அவரிடமே கேட்கப் பயந்தேன். மாமியாரிடமும் கேட்க அஞ்சினேன். சில தினங்கள் கழித்து அவரிடமே இதைப்பற்றிக் கேட்டுத் தான் பார்ப்போமே....என்று மனத்தை தைரியம் செய்து கொண்டுதான் இருந்தேன். ஆனல், நெருங்கிக் கேட்கப் பயந்தவாறு இருந்தும் ஒருதினம் சமயம் பார்த்துக் கேட்டும் விட்டேன்.

பூபதி:—கேட்டாயா? என்ன சொன்னன்? ஏதாவது விஷயம் தெரிந்ததா?

பவானி:—எந்த ரகஸியமும் தெரிவிப்பதற்கு முன்பு நான் கேட்ட உடனே, "ஐயோ, தாம்பூலம் போட்ட அதிர்ச்சி மாரடைக்கிறதே! மார்நோவு உயிர்போகிறதே" என்று ஒருபெரிய புரளிசெய்து மயக்கம் போட்டவர்போல் செய்துவிட்டதால் என்பாடு நடுநடுங்கிவிட்டது. அவருடைய மயக்கம் தெளிந்து ஒரு நிலைமைக்கு வந்தபிறகு நான் கேட்கவில்லை. பிறகு பார்த்துக்கொள்ள எண்ணி வாளா இருந்துவிட்டேன். அதன் பிறகுதான் இந்தப் பயங்கர கடிதம் நகை முதலியன கிடைத்ததும் என்னிதயமே வெடித்துவிட்டதுபோலத் தவிக்கிறேன். இதற்குள்நீங்கள் ஒரு எரிமலைபோன்ற விஷயத்தைக் கொண்டுவந்து விட்டீர்களே! நான் என்ன செய்வேன்? இதற்கோர் வழி இல்லையா? அப்பா! இப்போது நீங்கள் சொல்வதிலிருந்து விஷயம் விபரீதமாயிருக்கும்போல் தோன்றுகிறதே.

பூபதி:—அம்மா! உன் தலைவிதி விபரீதத்திலும் விபரீதமாகவே இருக்கிறது! இதற்கு வழி என்ன செய்வது என்றே புரியவில்லை. மனிதன் காணமல் மறைந்திருப்பதி

விருந்து எங்குப் போயிருக்கக்கூடும் என்று ஊகிக்கவும் தெரியவில்லை. போலீஸாரிடம் அகப்பட்டுக்கொண்டிருந்தால் உடனே தகவல் தெரிந்துவிடும்; அதில்லாததால் அகப்பாடாமல் கண்மறைவாக இருப்பதாகத்தான் தெரிகிறது. எனக்கு இப்போதிருக்கும் ஆத்திரத்தில் அவனை எப்படியாவது கண்டு பிடித்து வெளிநாட்டிற்கு மாறு வேஷத்துடன் அனுப்பித் துலைத்துவிட்டால் தூக்கு தண்டனை என்கிற பயங்கரத்திலிருந்து காப்பாற்றலாம். நீ சுமங்கலியாக இருந்து காலத்தைத் தள்ளலாம். இந்த இரண்டு வழிகளைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லையம்மா! நான் இந்த பீரோவை இப்போது உடைத்துப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்.

பவானி:—ஐயோ! வேண்டாமப்பா! கிணறுவெட்டப் பூதம் கிளம்பியதுபோல் கொலைக்கு மேல் கொலையாகக் கிளம்பி நம்மைக் கொலை செய்வது போதும். அதைத் தவிர இன்னும் வேறுவிதமான பயங்கரம் கிடைத்துவிடுமோ என்று நடுங்குகிறது அப்பா!—என்று பவானி தன்னை மீறிக் கண்ணீர்விட்ட சமயம், தவழ்ந்து வந்த குழந்தை பவானியின் மடிமீதுவந்து "அம்மாம்மா" என்று தனது அருமை மழலைச் சொல்லால் கூவிக் கட்டிக்கொண்டது.

பொங்கிவரும் துக்கத்தோடு குழந்தையை வாரியணைத் துக்கொண்ட பவானி, "என் கண்ணே! துரத்ருஷ்டப் பிண்டமாய் நாம் இருக்கிறோமே, என்ன செய்வேன்?" என்று அழுதுவிட்டாள்.

அதே சமயம் யாரோ ஒரு சின்ன பையன் வாசலில் வந்து கூப்பிட்டான். பவானி அலறியவாறு ஓடினாள். ஒரு சிறிய துண்டு கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஒரே ஓட்டமாகஓடி மறைந்துவிட்டான். எதனாலோ பவானியின் குடல் நடுங்கக் கைகள் உதறக் கடிதத்தை வாங்கியதும், அருகில் இருந்த அவள் பிதா அக் கடிதத்தைத் தானே வாங்கிப் பார்த்தார்.

"சில காலத்திற்கு என்னை மறந்துவிடு. குழந்தையை.... என்றவாக்கியம் பூர்த்தியாகாமல் மொட்டையாயிருப்பதைக் கண்டு ஒன்றுமே புரியாத பூபதி மேலும் மின்ஸாரம் தாக்கியதுபோல் நின்றுவிட்டார்....கையெழுத்துமட்டும் கட்டாயம் முருகப்பனுடையதுதான் என்பது புரிந்துவிட்டது. எழுத ஆரம்பித்த பதம் முடியாமல் மொட்டையாக ஏன் இப்படி அனுப்பவேணும்?....என்று யோசித்து நிற்பதைக் கண்ட பவானி கடிதத்தைத் தானே வாங்கிப் பார்த்தாள்; அவளும் அப்படியே அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்து

நின்றுவிட்டாள். உலகத்தின் கவலையோ! களங்கமோ! ஒன்றுமே அறியத குழந்தை "பகபக"வென்று சிரித்தது.

---

## 8. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை!

ப:—அப்பா! இந்தத் துண்டுக் கடிதத்திலிருந்து அவர் இந்த ஊரிலேயே இருப்பதுபோலத் தெரிகிறதே! உடனே அந்தப் பையனைக் கூப்பிட்டு விஷயத்தைக் கேட்டால் ஏதாவது தகவல் கிடைக்குமா?—என்று சொல்லியபடி வாசலுக்கு ஓடினாள்; கண்ணுக்கெட்டிய மட்டில் காணவில்லை. வாசலில் சற்று தூரத்தில் நின்ற ஒரு ரிக்ஷாக்காரன் இந்த வீட்டையே உற்றுக் கவனித்துக்கொண்டிருப்பதைக் கண்ட பவானி, "ஏம்பா ரிக்ஷாக்காரா! இங்கிருந்து ஒரு சின்னப் பையன் ஓடினானே, நீ பார்த்தாயா?" என்று பதைபதைக்கக் கேட்டாள்.

ரிக்ஷாக்காரன் பதில் சொல்ல வாய்குளறி முகம் விகாரப்பட்டு ஏதோமாதிரியாகிவிட்டது! அவன் கண்களின் பார்வை பூராவும் இடுப்பிலுள்ள குழந்தையின் மேலேயே தாவிப் பறக்கிறது. அவனை யறியாது கண்ணீர் குளம்போல் தேங்கும் பரிதாபத்தை யறியாத பவானி, "ஏ ரிக்ஷாக்காரா! நான் கேட்பது உனக்குக் காது கேட்கவில்லையா? ஏன் இப்படி என் கேள்விக்கு பதில் சொல்லாமல் குழந்தையை விரைக்க விரைக்கப் பார்க்கிறாய்? ஏன், அகப்பட்டதை அடித்துக்கொண்டு போவதற்காகவா இப்படி விழுங்கிவிடுவாய்போல் பார்க்கிறாய்?" என்று கூறியபடி குழந்தையைக் கவிழ்த்துப் படுக்கவைத்து மறைத்துக்கொண்டாள்.

தன் தலையிலுள்ள ஹாட்டினால் முகத்தை மறைத்தபடியே, "கொயந்தையை நானு பாக்கலீங்க! நான் திருடனில்லீங்க! நானும் புள்ளைக்குடிக்காரன்தான்! கொயந்தெ.... என்று முடிக்கமுடியாமல் தொண்டையை அடைத்துக் கொண்டுத் திணறுவதற்குள், பவானி சடக்கென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு போய்விட்டாள்... இந்தக் காலத்தில் யாரையுமே நம்பக்கூடாதப்பா! இந்த வீட்டில் ஆண் பிள்ளை இல்லை என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டான் போலிருக்கிறது. ஒரு ரிக்ஷாக்காரன் அசடு வழிய இங்கேயே பார்க்கிறான். அல்லாஸாமி வேஷத்தில் கரிபூசிய மனுஷ்யன்போலக் காணப்படும் அவனைப் பார்த்தாலே வெறுப்பாயிருக்கிறது. அந்த ராஸ்கல் குழந்தையை இமை இசைக்காமல் பார்க்கும் பார்வை எனக்குப் பயமாகக் கூடப் போய்விட்டது. அதனால்தான் வந்துவிட்டேன்.

திருட்டுப் பயல்கள்தான் உலகத்தில் மலிந்துவிட்டார்களே!" என்று படபடத்துக் கூறுவதைக் கேட்ட அவள் பிதா சற்று யோசனை செய்தார்.

பவானி! நீ சொல்வதைக் கேட்கும்போது எனக்கு ஏதேதோ சந்தேகந்தான் தோன்றுகிறது. உன் கணவன் விஷயத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு யாராவது போலீஸ் துப்பறிபவன்—அதான்—ஜம்புலிங்கம் என்கிற பெரிய புலி இருக்கிறதே! அந்த ஆள் ஒருவேளை ரிக்ஷாக் காரனைப்போல வேஷமணிந்து இப்படிப் பார்க்கிறானே? என்ற சந்தேகந்தான் எனக்கு உண்டாகிறது. இவனையும் காணவில்லை; விஷயமோ! பெரிதாக இருக்கிறது. என்ன செய்யலாம் என்றே புரியவில்லை.

பவா:—அப்பா! நீங்கள் இத்தனை கூர்மையாகச் சொல்லிய பிறகு எனக்கும் அப்படியே பயமாயிருக்கிறது. நீங்கள். மறைவிடமாக இருந்து ரிக்ஷாக்காரனைக் கவனியுங்களேன் அப்பா!....இல்லாவிட்டால் ஒன்று செய்யுங்கள் நீங்களே அந்த ரிக்ஷாவில் வெளியே போவதற்காக அவனைக் கூப்பிட்டு விசாரித்துப் பாருங்கள். அப்போது உண்மை ரிக்ஷாக்காரனுக இருந்தால் வண்டி இழுக்கும் மாதிரியிலிருந்து தெரிந்துவிடும்—என்றாள்.

இதை ஆமோதித்த அவர் உடனே வீதிக்கு வந்து பார்த்தார்; ரிக்ஷாவையும் ஆளையும் காணாது அந்த இடம் காலியாக இருந்தது கண்டு திடுக்கிட்டார்; கோடிவரையில் சுற்றுமுற்றும் பார்த்தார். ஒன்றும் புரியாததால் முகவாட்டத்துடன் உள்ளேவந்து, "பவானி! எது எப்படியாவது இருக்கட்டும்; முக்யமான ஸாமான்களை எடுத்துக்கொண்டு உன்னை இப்போதே நான் ஊருக்கு அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். பிறகு நான் ப்ரயத்தனம் செய்து அந்தப் படுபாவியை எப்படியாவது கண்டு பிடித்து உயிருக்காவது விபரீதமில்லாமல் பார்க்கிறேன். புறப்படம்மா! இந்தச் சனியன் எதற்கு ஒன்று!....இதை அவா பாட்டியிடம் துலைத்துவிடு....

என்றதைக் கேட்ட பவானியின் மனம் துணுக்குற்றது. "அப்பா! முன்பே சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். பெற்ற பாசத்தினுல்தானே நீங்கள் இத்தனை தூரம் ஓடிவந்து பாடுபடுகிறீர்கள். அத்தகைய பாசத்தைக் காட்ட இதற்குப் பெற்ற தாயார்தான் நிம்மதியாய் மறைந்துவிட்டாள். தகப்பன் கதியோ இப்படி ஊசலாடுகிறது. இந்நிலைமையில் அனாதையாய் இக்குழந்தையை

விட்டுச்செல்வது மகத்தான பாபமில்லையா? அதனிடம் உங்களுக்கு ஏனப்பா இத்தனை வெறுப்பும் ஆத்திரமும் உண்டாகிறது? எனக்கென்னவோ அதனிடம் உயிருக்குயிரான பாசம் என்னிதயத்தில் நிறைந்து தேங்கிவிட்டதால் இதை எடுத்துக்கொண்டுதான் நான் வருவேனேயன்றி விட்டுவிட்டு வரவே மாட்டேன். நான் இங்கிருப்பது சரியில்லை என்றால் என்னையும் குழந்தையையும் என் மாமியாரிடமே கொண்டு விட்டுவிடுங்கள். கிராமத்திலேயே என் தலைவிதியைத் துலைக்கிறேன். நான் குழந்தையை ஒரு போதும் விடமாட்டேன்'' என்று அழுத்தமான குரலில் கூறிக் குழந்தையைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

குழந்தையின் பஞ்சுபோன்ற உள்ளத்தில் அன்பின் பெருமிதம் அலைபோல் மூண்டதால் தாயை அதுவும் விவரம் தெரியாமல் சேர்த்துக் கட்டிக்கொண்டது. பூபதியின் நெஞ்சில் உள்ள கவலையினால் இந்தப்பச்சைக்குழந்தையின் மீது வெறுப்பும் ஆத்திரமும் மூண்டுவிட்டதேயன்றி மக்களைப் பெற்ற உள்ளம் வரண்ட பாலைவனமாக இருக்கவில்லை. காலம், காரணம், கவலை எல்லாம் ஒன்றுகூடினால் சில சமயம் மனிதர்களின் மனிதத்தன்மையைக்கூட மறக்கும்படிச் செய்துவிடுகிறது. இது இயற்கையின் போக்கு.

தன் மகளைத்தான் படாடோபத்திற்கும் பணத்திற்கும் ஆசைப்பட்டுக்கொண்டு தீர விசாரிக்காமல் கொடுத்து விட்ட கொடுமை போதாமல் குழந்தையிடம் அன்பாயிருப்பதையும் கெடுத்து அவளுடைய குழம்பிய அளிந்த புண்ணாகியுள்ள மனத்தைப் பின்னும் காக்காய் கொத்திய ரணமாக்கிவிட வேண்டாம்...என்று தோன்றியதால் பூபதியே தனக்குள் வருந்தியவாறு, "அம்மா, பவானி! கலங்காதேம்மா! விதிபோல் நடக்கட்டும். முதலில் சாமான்களை எல்லாம் எடுத்து மூட்டை கட்டு. இன்றே நாம் இவ்விடத்தை விட்டுப் போய்விடலாம்'' என்று கண்ணீர் பெருகக் கூறினார்.

மேல்கொண்டு எத்தகைய விஷயமும் நடக்கவில்லை. முக்கியம் என்று தோன்றும் சாமான்களை எல்லாம் பவானி பெட்டியில் வைத்துப் பூட்டினாள். இதே பெட்டிகளை இதே சாமான்களை எல்லாம் இங்கு வரும்போது அடுக்கிக்கொண்டு வரும்போது எத்தனை சந்தோஷமாயிருந்தது. அதே சாமான்களை இன்று கண்ணீர் வெள்ளத்துடன் கட்டும்போது அந்த உணர்ச்சியை அவளால்

கட்டுப்படுத்தவே முடியவில்லை. விம்மி விம்மிப் புலம்பிய வாறு அவைகளைக் கட்டி வைத்தாள்.

பூபதிக்கு அன்றிரவு இன்னும் ஏதோ பண விஷய மான வேலை இருந்ததால் அன்று ஊருக்குப் போக முடிய வில்லை. பறி கொடுத்த வீடுபோல் களையிழந்து கண்ணீர்க் கடலில் வாழ்க்கைப்படகு மிதக்க, பவானி கலங்கிய வாறு படுத்திருந்தாள். கள்ளங்கபடமற்ற குழந்தை நிர்மல மர்கத் தூங்கிக்கொண்டிருந்தது. தூக்கத்தில் பச்சிளங் குழந்தைகள் சிரிப்பதும் அழுவதுபோல் உதட்டைப் பிதுக் கிக் கேவுவதும் சகஜமாகையால் அதுபோல் இக்குழந்தை யும் சிரித்தும் அழுதும் செய்வதைக்கண்ட பவானி குழந் தையின் முகத்தோடு முகம் பதித்து முத்தமிட்டவாறு, "கண்மணி! உன் தாயார் மகா பாக்யசாலி! இந்தச் சங்க டங்களை எல்லாம் அனுபவிக்காமல் போய்விட்டாள். அந்த அனுபவத்திற்கும் ஆடல்படுவதற்கும் நான் பிறந்து தவிக் கிறேன். கண்ணே! நீ கொலைகாரனின் மகளா? ஐயையோ! நானும் கொலைகாரனின் மனைவியா?........நினைக்கும்போதே சரீரமேபற்றி எரிவதுபோலிருக்கிறதே" என்று பயித்தியக் காரியைப்போல் தன் போக்காக மெல்லக் கூறியபடியே குழந்தையின் மலர்முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற சமயம் மெல்லிய குரலால், "பவானீ! பவானீ! என்று கூப்பிடுவது கேட்டுத் திடுக்கிட்டு அலறியவாறு நாற்புறமும் திரும்பிப் பார்த்தாள்.

பவானியின் தகப்பனர் அடுத்த அறையில் படுத்திருந்ததால் அவர்தான் கூப்பிடுகிருரோ என்று அந்தப்பக்கம் திரும்பப் போகையில் வெளிமாடி ஜன்ன லுக்கருகே நிற்கும் ஒரு உருவம், "உஸ்!......உஸ்!....சத்தம் செய்யாதே பவானீ! நான்தான் உன்கணவன் முருகப்பன் கூப்பிடுகிறேன். கதவைத் திறந்துகொண்டு வெளியே வா ....பயப்படாதே" என்ற குரலைக் கேட்டு இன்னதென்று விவரிக்க இயலாத விதமான அதிர்ச்சியை அடைந்து "ஹா!" என்று வாய்விட்டுக் கத்திவிடவே துணிந்தாள்.

மெல்ல சமாளித்துக்கொண்டு, "ஸ்வாமீ! ஸ்வாமீ! தாங்களா! இப்படிக் கூப்பிடுகிறீர்கள்? உண்மையில் தாங்கள்தாஞ?" என்று வாய்க் குளறியவாறு கதவைத் திறந்தாள். பயம் ஒருபறம் நடுக்குகிறது. குரலை உற்றுக் கவனித்ததில் தன் கணவன்தான் என்பது சந்தேக மறத்தெரிந்தும் எதனுலோ அதிர்ச்சிமட்டும் தாளவில்லை.

கதவைத் திறந்த பவானி வெளியில் செல்லத்தியங்கிய சமயம், "பவானீபயப்படாதே....நான் ஒருக்ஷணநேரம்கூட நிற்கக்கூடாத பேராபத்தான நிலைமையில் வந்திருக்கிறேன். என்னை எந்த நிமிஷம் போலீஸார் பிடித்து விடுவார்களோ? எந்த நிமிஷம் என் விதி என்னை விழுங்கி விடுமோ? தெரியவில்லை. துஷ்ட சகவாஸத்தின் பலனை— முடிவை—அடைந்து விட்டேன். நான் கொலைகாரன் பவானீ! நான் கொலைகாரன்! இன்று பகல் வாசலில் குழந்தையுடன் நீ நின்றபோது ரிக்ஷாவுடன் நின்றது வேறு யாருமில்லை, பவானீ! குழந்தையைக் கட்டித் தழுவி கடைசீமுத்தமிட்டு விட்டு உன்னிடம் என்னுடைய சிதறிய உள்ளத்தின் கொதிப்பைத் திறந்து காட்டிவிட்டுத்தான் போகவேண்டுமென்று துடித்தேன்.

"ஹா....ஐயோ ரிக்ஷாக்காரனுக நின்றது நீங்களா? ஐயோ! என்னை இப்போது என்னவோ் செய்கிறதே! அப்பா உள்ளே இருக்கிருர்......கூப்பிடுகிறேன்.... என்பதற்குள், "ஐயையோ! வேண்டாம் பவானீ! வேண்டாம்! நான் குழந்தையை முத்தமிட்டுவிட்டு ஓடி மறைந்து விடுகிறேன். இனி என்னைப்பற்றிக் கவலைப் படாதே! என் விதியின் விளையாட்டு என்னை எத்தனைதூரம் கொண்டு போகுமோ தெரியாது. ஆனல், பவானி! நான் நிரபராதி! என் கையால் நான் யாரையும் கொலைசெய்ய வில்லை. இது சத்யம்! ஆனல், சூழ்நிலையின் விபரீதத்தினுல் நான் கொலைகாரனுகி விட்டேன்.........என்று கூறியபடி குழந்தையை மாறிமாறி பல முத்தங்களிட்ட பிறகு, 'பவானீ இனி என்னைத் தேடவே வேண்டாம். இதோ! என் இரும்பு பெட்டிச் சாவி; நான் உன்னை மணந்து ஒருநாள்கூட உன்மனம் மகிழ்ச்சியுடன் வாழச்செய்யாத சண்டாளனுகி விட்டேன். என்னை மன்னித்துவிடு..........குழந்தை எழுந் திருக்கப் போகிறது பவானீ! பவானீ! நீ என்னை மன்னித்துவிடு!' என்று மெஷின் போல் கூறியவாறு அவள் கைகளைப்பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டு அவள் பதில் சொல்வதற்குள்ளேயே கனவில் தோன்றி மறைவதுபோலும், மின்னல் தோன்றி மறைவதுபோலும் எப்படித்தான் மறைந்தான் என்று தெரியாமல் ஒரே விசித்திரமாய் மறைந்துவிட்டான்.

பவானி இந் நிலைமையில் நினைவே தடுமாறி விழுந்து விட்டாள். தடாரென்று இவள் விழுந்த ஓசையைக் கேட்டு அடுத்த அறையிலிருக்கும் அவள் பிதா அலறிய வாறு ஓடிவந்து கதவின் பக்கலில் விழுந்துகிடக்கும்

பவானியைக் கண்டு விஷயம் இன்னதென்று புரியாமல் முகத்தில் ஜலம் தெளித்து, "பவானீ! என்னம்மா விஷயம்?" என்று கேட்டார்.

சிறிது நேரங் கழித்து பவானி தெளிவுபெற்று, "அப்பா இதோபாருங்களேன்! இரும்புப்பெட்டிசாவியைக் கொடுத்துவிட்டுக் குழந்தையை முத்தமிட்டுப் பின், "நான் நிரபராதி! ஆனால், விதியினால் கொலைகாரனாகிவிட்டேன்" என்று கூறிவிட்டு; ஒரே ஓட்டமாய் மாயமாய் மறைந்து விட்டாரப்பா!"என்று தகப்பனார்காலைப்பிடித்துக்கொண்டு கதறிவிட்டாள்.

திடுக்கிடக்கூடிய இச் செய்தியைக் கேட்ட பூபதிக்கு ஒரே அதிர்ச்சியாகிவிட்டது. ஐயையோ! கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதுபோலாகிவிட்டதே! என்னை ஏன் கூப்பிடவில்லை பவானீ! காரியம் மிஞ்சிவிட்டதே! ஆபத்து காத்திருக்கிறதென்ற நிலைமையில் அவன் ஏன் வெளியே போகவேணும்? எப்படியாவது நாமே அவனை எங்காவது பதுங்கவைத்துக் காப்பாத்தி இருக்கலாமே! இப்போது என்ன செய்வது, பவானி?" என்று பதறினார்.

பவானிக்கும் ஒன்றுமே சொல்லத் தெரியாமல் மிகவும் துவண்டுபோய்விட்டாள். அவளுடைய நிலைமையைப் பார்த்த பூபதியே பயந்துவிட்டார்....பவானீ! இரவோடு இரவாய் இந்தப் பெட்டியையும் திறந்து பார்த்துவிட்டு விடியற் காலையிலேயே நாம் போய்விடவேணும். இன்று இரவு தங்கியதற்கு அவனை நீ பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்ததுதான் லாபம். மனத்தைத் தளரவிடாதே" என்று தேற்றினார்.

இரும்புப் பெட்டியைத் திறந்தால் அதில் சுமார் பதினையிரக்கணக்கான புகைப்படங்களும் கவர்களும் கிடந்தன. அவைகளைப் படிக்கவோ பார்க்கவோ நேரமில்லை. ஒரு சிறிய பெட்டியில்:நோட்டுக்களாக சுமார் 10 ஆயிரம் ரூபாயிக்குக் குறையாமலிருந்ததைப் பார்த்ததும் இவர்களுக்கு ப்ரமிப்பும் பயமும் அதிகரித்துவிட்டது. எப்போது அவன் வாயினாலேயே தான் போலீஸாரிடம் அகப்பட்டு விடுவேன் என்று சொன்னானோ அப்போது அவனைக் கைதியாக்கி விட்ட உடனே வீட்டைச் சோதனை போடுவார்கள். ஆகையால் பீரோவில் எதையுமே வைக்காமல் மறைத்துவிட்டுத் தான் நாம் செல்லவேணும். இந்தப் பணம் ஏதோ? அதுவும் தெரியவில்லை! என்று கூறியபடி சகலமான

காகிதங்கள் பைகள் முதலியவைகளை எடுத்து வெகு ஜாக்ரதையாகக் கட்டிக்கொண்டு வீட்டைச் சரியானபடி பூட்டிக்கொண்டு கிளம்பி விட்டார்கள்.

"ரிக்ஷாக்காரனை இருக்கும் தலைவிதியா இவருக்கு அமைய வேண்டும்? ஆண்டவனே! என்று தனக்குள் பவானி நெருப்பில் விழுந்த புழுவெனத் துடித்தாள். மேலும் சில நாட்கள் சென்று மறைந்துவிட்டன. பூபதி இருக்கும் புஷ்பவனம் என்கிற ஊர் மிகப்பெரிய பட்டினமு மில்லை. பட்டிக்காடுமில்லை. நடுத்தரமான நாகரீகமும் தொழில்சாலைகளும், உத்யோகசாலைகளும், காலேஜ் முதலிய கல்விச்சாலைகளும், நீதிமன்றமும் நிறைந்த ஊராகும்.

அதில் பூபதிபலதலைமுறையாக இருக்கும் பெரிய மனிதர்கள் மரபில் தோன்றியவராதலால் தன் மருமகப்பிள்ளையின் அவமானகரமான விஷயம் எங்கே வெளியாகி விடுமோ? பிறர் கண்டு பரிகஸிக்கும் நிலைமை வந்துவிடுமோ? என்கிற ஏக்கத்தினுல் உருகிப்போகிறூர். பவானியைப்பற்றிக் கேட்கவே வேண்டாம்....எந்த நிமிஷம் என்ன விஷயம் வந்து தாக்குமோ? என்கிற வேதனையினுல் குன்றிக் குறுகிப் போய்விட்டாள்.

ஒரு தினம் வந்த பத்திரிகையில் கெர்ட்டை எழுத்தில் "முருகப்பன் கைதியானுன். துப்பறியும் நிபுணர் ஸ்ரீமான் ஜம்புலிங்கம் வெகு ஸாமர்த்தியமாகக் கண்டுபிடித்துக் கைதியாக்கிவிட்டார். ஆனுல், மறுதினமே கைதியைக் காணவில்லை. எப்படியோ தப்பி ஓடிவிட்ட ஆச்சரியம் ஜம்புலிங்கத்தையும் திகைக்கச் செய்துவிட்டது. போலீஸார் பலமாகத் தேடுகிறுர்கள்" என்ற செய்தியைப் படித்த பவானிக்கு உலகமே தட்டாமாலை சுற்றுவதுபோலாகிவிட்டது. இருப்பினும் தப்பித்துக்கொண்டு போய்விட்டான் என்பதைப் படித்ததும் "இப்படியே எங்காவது தலைமறைவாய் ஓடி மறைந்துவிடக்கூடாதா? கடவுளே! அவரைப் போலீஸாரிடம் காட்டிக் கொடுக்காமல் எப்படியாவது காப்பாற்றிவிடேன்! அவர் நிரபராதி என்கிறூரே! அதை நீ அறிய மாட்டாயா? என்று அவள் உள்ளம் வேண்டித் துடித்தது.

---

**கருணை உள்ளம்**
அல்லது
**அன்பின் எதிரொலி**
(நாடகம்)

குழந்தையுள்ளத்தை பிரதிபலிக்கும் நாடகம். குழந்தைகள் நடிப்பதற்கென்றே அவர்கள் பேசும் தமிழில் எழுதப்பட்டது. விரைவில் வெளிவரும்.

# பாலர் மோகினி

## மாயக் கிளி

★

நெருப்பில் விழுந்த புழுவைப்போல் துடித்துக்கொண்டு இருந்த சாருகேசன் தன் உணர்வற்றுச் சாய்ந்தான். நெடுநேரம் சென்ற பிறகு உணர்வுபெற்று எழுந்து வெறிபிடித்தவனைப்போல் அரண்மனையை நோக்கி ஓடத்துடங்கினன். அவன் கால் முதல் தலைவரையில் ஒரேயடியாய் நடுங்கிக்கொண்டு இருந்தது.

வேர்க்க விலவிலக்க ஓடிவரும் சாருகேசனைப் பார்த்த காவலாளர்கள் ஒன்றும் புரியாது வந்து விசாரித்தனர். இளவரசிகளைக் காணவில்லை என்ற இடி முழக்கத்தைப்போன்ற செய்தியைக் கேட்டு எல்லோரும் மிரண்டு விட்டார்கள்.

மாலைக் கதிரவனின் பொன்னிறம் மஞ்சத்தை அலங்கரிக்க ராஜதம்பதிகள் உட்கார்ந்து தங்கள் பெண்களின் திறமையைப் பெருமையுடன் வானளாவப் பேசி மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். "பூஜை வேளையில் கரடி புகுவதுபோல்" சாருகேசன் கண்ணீர் பெருக ஓடிவந்து அரசனின் காலடியில் விழுந்து தேம்பித்தேம்பி அழுதான். விவரம் புரியாத அரசன் குருநாதருக்குத்தான் ஏதோ ஆபத்தாய் இருக்கும் என்று நினைத்து சாருகேசனை சமாதானம் செய்து விஷயத்தை விசாரித்தான்.

சாருகேசன் விஷயத்தைச் சொல்லப் பயந்து சற்று சமாளித்தவாறு, "அரசே! இளவரசிகளும், நானும் தோட்டத்தில் நாளை குருதேவர் கற்றுக்கொடுக்கப்போகும் பாடத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தோம். அந்தச் சமயம் அழகான கிளி ஒன்று கத்தியவாறு எங்கள் கவனத்தை இழுத்தது. கண் இமைக்கும் நேரத்தில் கிளி இளவரசியின் தோளில் வந்து உட்கார்ந்து அதிக ஆச்சர்யத்தை மூட்டியது. பிடிக்கும் சமயம் பறந்து விட்டது. இளவரசி அதன்மேல் அதிகம் ஆசைப்பட்டதால் அதைப்பிடித்துக் கொடுக்கலாம் என்று நான் பிடிக்கச் சென்றேன். ஆனல், கிளி என் காலை ஒடியும்படி அலைய வைத்துக் கடைசியில் கிடைத்தது. கிடைத்த கிளியை நான் கூர்ந்து பார்ப்பதற்குள் மாயமாய் மறைந்துவிட்டது. அதே சமயத்தில்தான் இளவரசிகளின் குரல்—ஏககாலத்தில் "ஐயோ" என்று அலறும் சப்தம்—

கேட்டது. நான் வேகமாய் அவர்கள் இருந்த இடத்திற்கு ஓடி வந்தேன், ஆனால், இடம் காலியாய் இருப்பதைப் பார்த்துப் பதறித் தோட்டம் பூராவும் தேடினேன். இளவரசிகள் கிடைக்காததால் ஒன்றும் புரியாது ஓடிவந்தேன். அரசே! இது ஏதோ மந்திரவாதிகளின் சூழ்ச்சிதான், சந்தேகமே இல்லை'' என்று அலறினன்.

சாருகேசனின் பேரிடிபோன்ற விஷயத்தைப் பூராவும் கேட்கும் சக்தி அற்று ராணி வெட்டிச் சாய்ந்த மரம்போல் நினைவற்று விழுந்தாள். அரசன் கதிகலங்கி இரு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு மஞ்சத்தின்மீது சாய்ந்தான். இதற்குள் விஷயம் காட்டுத் தீயைப்போல் பரவி, மந்திரி, சேனாபதி முதலியவர்கள் அரசனைப் பார்க்கக் கதறியவாறு ஓடிவந்தார்கள். நாடு பூராவும் ஒரே கலவரமும் துக்கமும் சூழ்ந்துகொண்டது. மாலை மங்குவதுபோல் நாடு பூராவும் உற்சாகம் மங்கி சோகக்களை தாண்டவமாடியது. நாட்டு மக்கள் ஒவ்வொருவர் கண்களும் கண்ணீரைக் கக்கியது.

யார் நம் இளவரசிகளைக் கொள்ளை அடித்துக்கொண்டு போய் இருப்பார்கள்? யாராய் இருக்கும்?......என்ற கேள்வி எல்லோர் இதயத்திலும் எழுந்தது. ஆனால், விடை ஒருவராலும் சொல்ல முடியவில்லை.

அந்த நாட்டைச் சுற்றி இருக்கும் காடுகள், குகைகள், புதர்கள் சகலமான இடங்களையும் தேடிப் பார்க்கும்படி ஸைன்யங்களை அனுப்பினர்கள். நாள்கணக்கில் சுற்றிய சேவகர்கள் இளவரசிகள் இருக்கும் இடம் தெரியாது வெறுங் கையுடன் திரும்பினர்கள். பல மந்திரவாதிகள் தங்கள் திறனைப் பூராவும் காட்டி மந்திரித்தார்கள். ஆனால், ஒன்றும் பலிக்கவில்லை. இவைகளால் மனம் உடைந்த அரசன் தன் செல்வங்களையே மறந்துவிட வேண்டுமோ என்ற அதித துக்கத்தில் மூழ்கினன். ராணி எழுந்திருக்கவும் சக்தி இல்லாது துரும்பாய் இளைத்துப் படுக்கையோடு படுக்கையாய் ஆனள். ராஜாங்கமே சோபை அற்றுக்கிடந்தது.

உலகம் பலவிதமல்லவா! அதிக சுகத்திலும், போகத்திலும் இருப்பவர்களுக்குக் கடவுளின் நினைவே இருப்பதே துர்லபம். கஷ்டம் ஏதாவது ஏற்பட்டால் அப்பொழுதுதான், ஐயோ...... கடவுளே! காப்பாற்று!...கை விடாதே'' என்று விழுந்து விழுந்து பஜிப்பார்கள். அதில் ராஜ தம்பதிகள் மட்டும் விலக்கா?

கோபூஜையால் குழந்தை பிறக்கும் என்று மஹரிஷி சொன்னதும் ப்ரமாத பக்தியுடன் பூஜை செய்தார்கள். குழந்தை பிறந்து கொஞ்சம் வளர்ந்ததும் பூஜையில் சிரத்தை கொஞ்சம் குறைந்தது. முடிந்த அன்று பூஜை செய்வது. முடியாத தினம் ஆட்களையே புஷ்பம் வைத்துப் பசுவுக்கு ஆகாரம் கொடுத்து அனுப்பிவிடச் சொல்வது; இப்படியாகப் பூஜையில் பக்தி அக்கரை இல்லாது குறையத் தலைப்பட்டது.

இளவரசிகளைக் காணவில்லை என்று சொன்ன பிறகுதான் மஹரிஷியின் வாக்கு ஞாபகத்துக்கு வந்தது. மஹரிஷியின் வாக்கு காதில் ஒலிக்கத் தொடங்கியது: "அரசே நீங்கள் தம்பதிகளாய் தினமும் காலையில் ஸ்நானம் செய்து மடியாய்ப் பூஜை செய்து வந்தால் பாபம் தீர்ந்து குழந்தை பிறக்கும். ஆனல், ஒன்று. உங்களுக்குப் புத்திரன் பிறந்ததுமே கோபூஜையை விட்டுவிடக்கூடாது. உங்கள் ஆயுள்வரை செய்தே ஆகவேண்டும்" என்று திரும்பவும் மஹரிஷி வந்து நேரில் சொல்வதைப் போல் தோன்றியது. ராணி ஆவேசம் வந்தவளைப்போல் எழுந்து உடனே பசுவையோட்டிவரும்படி உத்தரவு செய்தாள். மடியாய் ஸ்னனம் செய்து பூஜைக்குத் தயாராளுள்.

கம்பீரத்தோற்றத்துடன் சாக்ஷாத் லக்ஷ்மியைப்போல் வரும் பசு எலும்பும் தோலுமாய் சோபை அற்று வந்து நிற்பதைப் பார்த்த ராணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. தன்னையே மறந்து பசுவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "தாயே! உன்னை வாட வைத்ததினுல்தான் என் குடும்பம் வாடிவிட்டது. தாயே! என்னை மன்னித்து என் கண்மணிகளை உயிரோடு கொடுத்துவிடு. இனி என் ப்ராணன் போனலும் உனக்குச் செய்யும் பூஜை, பணிவிடையை மறக்கமாட்டேன்" என்று கண்ணீர் விட்டுக் கத்தி அழுதுவிட்டாள். ராணியின் வேண்டுதலுக்கு இரங்கிக் காப்பாற்றுகிறேன் என்று சொல்வதைப்போல் பசு சேர்ந்தாற்போல் முன்கால், வால் இரண்டையும் தூக்கித் தலையை அசைத்தது. இதைக் கண்ட ராணி பரவசமுற்று, "தாயே! என்னை ரக்ஷிக்கிறேன் என்று சொல்கிருயா?...உன் காலைத்தூக்கி எனக்கு அபயம் தருகிருயா?...என்று தன்னை மறந்து பசுவைச் சேர்த்துக் கட்டியவாறு ஆனந்தக்கண்ணீர் பெருக்கினள்.

---

குழந்தைகள் நாடகம்
கருணை உள்ளம் அணு 12.

# பாட்டி சொன்ன பழங்கதை 3.

சிறுவன் வை. மு. வெங்கடநரசிம்மன்.

✻

ஓர் ஊரில் ஓர் அம்மா, அப்பா இருந்தார்கள். அவர்களுக்கு ஓர் பிள்ளை இருந்தான். அவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. அவன் பெயர் ராமன். அவன் மனைவி பெயர் ஜானகி. அவர்கள் வீட்டில் எல்லோரும் தெய்வ பக்தி மிக்கவர்கள், அவர்கள் வீட்டுக் கொல்லையில் வெள்ளரிக்காய்த் தோட்டம் போட்டார்கள் அதில் ராமன் வெட்டி கொத்தி உழுது சரியாகச் செய்து விதை யிடுவான். ஜானகி தண்ணீர் விடுவாள். அது கொஞ்சம் நாள் ஆனால் காய்கள் நன்றாய்ப் பெரிதாகும். அப்படி இருந்த சமயம் ஜானகியின் தாய், தந்தையினர் வந்து ஜானகியைப் பத்து நாளில் கொண்டு விடுவதாக அழைத்துப்போய் விட்டனர். அவள் போய் கொஞ்சம் நாளில் காய் நன்றாய்ப் பெரிதாகி விட்டது.

இரண்டு மாதம் ஆகியும் ஜானகி வரவில்லை. ராமனும் எல்லோரும் வெள்ளரிக்காயை நன்றாய்ச் சாப்பிட்டனர். ஒரு நாள் ராமன் வெள்ளரிக்காய் கறியும் தயிர் சாதமும் ஜானகிக்குக் கொடுக்கஎடுத்துக் கொண்டுபோனான். வழியில் கடவுள் இவன் பக்தியை சோதிக்க ஒரு கிழவனாகவந்து "எனக்கு மிகப்பசிக்கிறது; கொஞ்சம் சாப்பாடு போடு" என்றார். உடனே ராமன் அவரை அழைத்து, மரத்தடியில் உட்கார வைத்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பாடு போட்டான். கிழவர் சாப்பிட்டார்.

பிறகு அவர் பாத்திரத்தைப் பார்த்தார். இன்னும் ஒரே ஒரு உருண்டைதான் இருக்கிறது. அதை ராமன், 'பரவாயில்லை. நீங்களே சாப்பிடுங்கள். நான் வீட்டிற்குப் போய் இன்னும் எடுத்துக் கொள்கிறேன்' என்றான். கிழவர் 'இனி எனக்கு வேண்டாம்' என்று சொல்லிப் போய்விட்டார்.

உடனே அதை எடுத்துக் கொண்டு, ஜானகியின் வீட்டிற்கு சென்றான். ஜானகி பாத்திரத்தைப் பார்த்து இது என்னவென்றாள். நடந்ததைச் சொன்னான் ராமன். 'சரி, இந்த ஒரு பிடி சாதத்தையாவது கொடு; நான் சாப்பிடுகிறேன்' என்று ஜானகி பாத்திரத்தைத் திறந்தாள். என்ன ஆச்சரியம்! பாத்திரத்து நிறைய சாதம் இருப்பதைக் கண்டு கடவுள் தான் வந்திருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். பிறகு அசரீரி வாக்காய், "ராமா! "உன் பக்தியை மெச்சினேன்" என்ற குரல் கேட்டதும் எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். அதன் பிறகு ராமனின் குடும்பத்தார் முன்னைவிட அதிகமாக பக்தி செய்து வந்தார்கள்.

✻

183190.

[ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்புடன் அழகான புகைப் படங்கள் எடுத்து உதவினார். அன்னாருக்குச் சங்கம் தனது நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தைச் செலுத்தியது.

மார்ச் 4வ யன்று பாலிகா கழகத்தின் தோத்திர பாட மாணவிகளுக்குப் போட்டி நடந்தது. அதில் ஸ்ரீமதிகள் சீதையம்மாள், லக்ஷ்மியம்மாள், H. R. ரங்கநாயகி அம்மாள் மூவரும் நீதிபதிகளாக இருந்து நடத்தினார்கள். 5வ யன்று பாலிகா கழகத்தின் வருஷ விழா ஸ்ரீமதி S. T. ஸ்ரீரங்கமமாள் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடந்தது. வருஷாவருஷம் சங்கத்தில் நடத்தும் வேஷப் பொருத்தப் போட்டியும் சிற்றுண்டி விருந்தும் அன்று நடத்தப் பட்டது. ஸ்ரீமதி A. ருக்மிணியம்மாள், ராஜம்மாள், புஷ்பம்மாள் மூவரும் வேஷப்பொருத்தப் போட்டிக்கு நீதிபதிகளாக இருந்து நடத்திக் கொடுத்தார்கள். கதம்ப நிகழ்ச்சிகள் நடந்தன.

7வ யன்று சங்கத்தின் 7-வது வருஷாந்திர பொது அங்கத்தினர்களின் கூட்டம் மிகமிக உத்ஸாகத்துடனும் ஆனந்தத்துடனும் நடந்தது. காரியதரிசிகள் வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்து, தேர்தலும் நடத்தினார்கள். பல கமிட்டி அங்கத்தினர்கள் பொது அங்கத்தினர்கள் எல்லோரும் பேசினார்கள். மங்களத்துடன் விழா முடிந்தது. பஞ்சமியன்று ஸ்ரீமான் சுந்தரம் ஐயர் ஸ்ரீ த்யாகராஜர் கீர்த்தனைகள் சிலவற்றைப்பற்றி அத்புதமாய்ப் பேசினார்.

யுகாதிப்பண்டிகை ஸ்ரீ புஷ்பம்மாள் தலைமையில் நன்றாக நடந்தது. ஸ்ரீமதி ருக்மிணி டீச்சர் அழகாகப் பேசினார்கள். பாலிகா கழகத்தின் சார்பில் குமாரி புச்சம்மாள் சங்கீத விருந்தளித்தாள். ஸ்ரீராமநவமி பஜனை ப்ரதிதினமும் மாலை வழக்கப்படி நடக்கிறது. ஸ்ரீமான் பண்டித திருவாலி ராமானுஜாசார்ய ஸ்வாமியால் கம்பராமாயணத்திலிருந்து சுந்தர காண்டம் உபன்யாஸம் ஸ்வாபதேசத்துடன் மிகவும் நன்றாக நடக்கிறது.

மத்தியில் பாலர் வித்யாலயக் குழந்தைகளுக்கு சினிமாப்படம் காட்டப்பட்டது.

## அனுதாபம்

நமது சங்கத்தின் நலனுக்காகப் பல துறைகளிலும் உழைத்து வரும் ஸ்ரீ M. O. அழகியசிங்கராசாரியவர்களின் பெரிய தாயாரும் சங்கத்தின் அபிமானியும் "மதனியம்மா" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவருமான மூதாட்டி ஸ்ரீமதி அலமேலம்மாள் சங்கத்திற்குச் சொந்த வீடு வாங்குவதற்கு முன்பு சுமார் நான்கு வருஷ காலம் இடம் கொடுத்து உதவி செய்தவர், சங்கத்திற்கு ஆயிரம் ரூபாய் கடனும், 101 ரூபாய் நன்கொடையும் அளித்து ஆசிர்வதித்த பெரியம்மாள் மறைந்துவிட்டதற்காக சங்கம் அனுதாபத்தைத் தெரிவிக்கிறது. சென்ற 28-3-55 நடக்கவிருந்த சங்கத்தின் 7-வது வருட விழா அன்றையதினம் ஷை அம்மையாரின் மறைவு ஏற்பட்டதால் ஒத்திவைக்கப்பட்டு, சங்கத்தின் அனுதாபமும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

## ஜகன்மோகினி வெளியீடுகள்

### தற்போது கைவசமுள்ள

### வை.மு.கோ.

#### நாவல்கள்

1. வைதேகி ரூ. 4—8
7. கோபாலரத்னம் 1—4
11. வீரவஸந்தா 1—0
15. நளினசேகரன் 1—0
25. பக்ஷமாலிகா 0–12
35. அனாதைப் பெண் 1–12
42. உளுத்த இதயம் 0—8
43. மகிழ்ச்சி உதயம் 1—4
45. மாலதி 1—0
46. வத்ஸகுமார் 1—0
49. படகோட்டி 1—2
50. ஆத்ம சக்தி 2—0
51. உணர்ச்சி வெள்ளம் 2—8
52. ஸந்தோஷமலர் 2—0
53. கருணாலயம் 2—0
54. புகழ்மாலை 1 12
56. சுடர் விளக்கு 0 12
57. கலாநிலயம் 1 12
58. ஞான தீபம் 2—4
59. வாத்ஸல்யம் 2—0
60. க்ருபாமந்திர் 1—4
61. மதுரகீதம் 2—0
62. பிரார்த்தனை 1—0
64. மலர்ந்த இதழ் 2—8
65. அமுத மொழி (சாதா) 2—0
    ” (கிளேஸ்) 2—8
66. பிரதிக்ஞை 1—0
67. ஆசைப்ரவாகம் 2—0
69. அபராதி 1—2
70. வெளுத்த வானம் 2—0
71. ப்ரதிபலன் 1—8
72. பவித்திரப்பதுமை 1—8
73. பெண் தர்மம் 1—0
74. உண்மைச் சித்திரம் 1—0
75. தெய்வீக ஒளி 2—0
76. சிலாசாஸனம் 1 12
77. புதுமைக்கோயில் 1—4
78. மணத்தாமரை (மலிவு) 1—0
79. தபால்விநோதம் 1—0
80. ஓவியப்பரிசு 1—8
81. இனிய முரசு 1—0
82. ஆண்டவனின் அருள் 1—0
83. இசைப்புயல் 1—8
85. காலக்கண்ணாடி 1—8
86. ஜெயபேரிகை 1—8
87. ஜீவநாடி 2—0
88. வீராங்கனை 1–12
89. கானகலா 0—8
90. தூய உள்ளம் 0—8
91. ஸௌபாக்யவதி 0—8
92. ப்ரேமாச்ரமம் 0–12
93. நியாயமழை 0--12
94. அருணோதயம்* 0--12
95. மனச்சாட்சி 0--12
96. ப்ரபஞ்சலீலை 0—8
97. வெற்றிப் பரிசு 0—8
98. ரோஜாமலர் 0—8
99. இந்திரமோஹனா* 1—0
100. பாதாஞ்ஜலி 2—0
101. அமைதியின் அஸ்திவாரம் 1-12
102. நம்பிக்கைப் பாலம் 1—8
103. சாந்தியின் சிகரம் 4—0
104. கடமையின் எல்லை 1--12
105. குலதனம் 0-12
106. தைரிய லக்ஷ்மி 0—8
107. சுதந்தரப் பறவை 1—8
108. நிர்மல நீரோடை 3—0
109. குணக் குன்று 2—0
110. புனித பவனம் 2—0

*நாடகம்

---

**வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்**

பாலர் மோகினி

12 சிறு கதைகள் 1—0

---

**ப்ர. ப. அண்ணங்கராசாரியர் உரையுடன்**

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் 1—0

அபூர்வ ராமாயணம் 1—8

---

**யோகி சுத்தானந்த பாரதியார்**

காந்தி கீர்த்தனம் 3—8

---

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKIAMMAL is printed & published by V. M. PARTHA-SARATHY at the Jagan Mohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.